www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (30.07. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (140) அன்பளிப்பு: 60 p


*அனைத்துத் தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்.*

– தமிழீழத் தேசியத் தலைவர்

# முன்னர் நாம் அனுபவித்த சுதந்திரம் தற்போது தலைகீழாகி விட்டது

## – கொழும்பு வானொலிக்கு யாழ் விவசாயிகள் பேட்டி

"பாடுபட்டு பயிர் செய்து விளைவித்த பொருட்கள் நம் கண் முன்னே கெட்டழிந்து போகின்றன. எமது நாளாந்த வாழ்க்கைத் தேவைகள் சிதைந்து வருகிறது. இதற்கு சிறிலங்கா இராணுவமே காரணமாக உள்ளது."


இவ்வாறு யாழ் குடாநாட்டு விவசாயிகள் கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அளித்த பேட்டியில் பகிரங்கப் படுத்தியுள்ளனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஒன்றில் சிறிலங்கா இராணுவத்தின் கொடிய அடக்குமுறைகளினால் தமது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் அச்சுறுத்தல்கள் குறித்து பத்திரிகையாளர்களுக்கு அவர்கள் எடுத்து விளக்கினர்.

குடாநாட்டில் பரவலாக அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளில் தங்கள் விளைபொருட்களை கொட்டி அள்ளும் போது ஏற்படும் தமது உணர்வை வார்த்தைகளால் தெரிவிக்க முடியாது எனக் கூறி வேதனைப் பட்டனர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாடு காரணமாக விவசாயத்திற்கு தேவையான உரவகைகளும் கிருமி நாசினிகளும் கூட இல்லாத நிலையில் தாம் பயிர் விளைவிக்கப்படும் கஸ்டங்களை கனத்த இதயத்துடன் எடுத்து இயம்பினர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்த காலத்தில் தமக்கு சுதந்திரம் இருந்ததாகவும், தமக்கு எதுவித தடைகளும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



# விடுதலைப் புலிகளின் பலமுனை தாக்குதல்கள்

## 906 விமானப்படையினர் தப்பி ஓட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றித் தாக்குதல்களினால், சிறிலங்காப் படையினர் நிலை குலைந்து போயுள்ளனர். ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கென அனுப்பி வைக்கப் பட்ட விமானப்படையினர் 906 பேர் தப்பி ஓடியுள்ளதாக சிறிலங்கா தரப்பை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நெடுங்கேணிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் மீது 23-7-97இல் விடுதலைப் புலிகள் மூன்று மணி நேரமாக கடுந்தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். ஒரு அதிகாரி உட்பட 18 பேர் காயமடைந்துள்ளதாக சிறிலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு முன்னேறிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகள்மீது விடுதலைப் புலிகள் மீண்டுமொரு அதிரடித்தாக்குதலை நடாத்தியுள்ளனர். நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தினரின் பதுங்கு குழிகள் மற்றும் காவலரண்கள் விடுதலைப் புலிகளால் தாக்கப் பட்டதாகவும் மிகக் குறுகிய இடைவெளியில் நின்று விடுதலைப் புலிகள் சிங்களப் படையினருடன் மோதினர் என ஏபி செய்தித்தாபனம் தெரிவித்துள்ளது. 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 27 இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

### காட்டிக் கொடுத்தமைக்காக கைதானவர்களில்

# ஏழுபேர் விடுதலை

கடந்த 2ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் இறக்கக்கண்டியில் விடுதலைப் புலிகளால் விசாரணைக்கென கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட 25 முஸ்லிம்களில் ஒரு மௌலவியும் 6 பள்ளி மாணவர்களும் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனின் பணிப்பின் பேரில் விடுவிக் கப்பட்டனர். செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியிடம் இவர்கள் கையளிக்கப்பட்டனர்.

### காட்டிக்கொடுப்பு

கடந்த 28-6-97 அன்று திருகோணமலைக் கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த கடற்புலிகள் விபத்தில் சிக்குண்டனர். படகை உடனே கைவிட்டு சில மைல்கள் நீந்தி இறக்கக்கண்டி கடற் கரையோரமாகக் கரை சேர்ந்தனர். அங்கு மக்களிடம் உதவி கேட்ட புலிகளை அம்முஸ்லிம் மக்கள் கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியதுடன் சிறிலங்கா இராணுவத்தை வரவழைத்து அவர்களைக் காட்டியும் கொடுத்தனர். இது தொடர்பாக 25 முஸ்லிம்களும் 4 சிங்களவர்களும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# காணவில்லை

மடகஸ்காரில் இருந்து சிறிலங்கா நோக்கிச் சென்ற ஆயுதக் கப்பல் ஒன்றைக் காணவில்லை என சிறிலங்கா தேடிக் கொண்டிருக்கிறது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்திற்குத் தேவையான கனரக பீரங்கிகள், அவற்றிற்கான எறிகணைகளுடன் மற்றும் நவீன ரகமான பெருமளவு ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்த கப்பலே காணாமற் போயுள்ளது. ✳

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# 75,000 தமிழ் மக்கள் கையெழுத்திட்டு ஐ. நா. பொதுச்செயலருக்கு மகஜர்

**15-7-97** செவ்வாய்க்கிழமை காலை 10.20 மணிக்கு, அக்கராயன் மகா வித்தியாலயத்திலிருந்து சிறிலங்கா அரசின் மனிதாயத்து எதிரான இன அழிப்பு நோக்கிலான செயற்பாடுகளைக் கண்டித்து பிரமாண்டமான பேரணி ஒன்று புறப்பட்டது. ஒருபுறம் பேரழிவுகளை ஏற்படுத்தும் மக்கள் மீதான யுத்தத்தை சிறிலங்கா இராணுவத்தைக்கொண்டு நடாத்திக் கொண்டு மறுபுறத்தில் பொருளாதாரத்தடை மருந்துத் தடை உணவுத்தடை என்பவற்றை ஏற்படுத்தித் தமிழ் மக்களை மனித இனம் என்றுகூட எண்ணிப்பாராது பூண்டோடு அழிக்க முற்படும் சிறிலங்கா அரசின் செயல் மக்களை உணர்ச்சிப் பிழம்புகளாக மாற்றிநின்றது. திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளினால், இறப்பு வீதம் தமிழரிடை செங்குத்தாய் அதிகரித்துச் செல்வதையும், பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்து வருவதையும் சுட்டிக்காட்டிய மக்கள், பிறக்கும் குழந்தைகள் எடை குறைந்தவர்களாகவும், வளரும் சிறுவர்கள் ஊட்டச் சத்தற்றவர்களாகவும், சிறிலங்காவால் வதைக்கப் படுவதை எடுத்து விளக்கினர். உணவுகளை வன்னிப் பிரதேசத்தில் நுழைய விடாது தடுக்கும் சிறிலங்கா, மக்கள் உயிர் வாழத் தேவையான உணவினை சாகுபடி செய்தாலும் அவற்றை திட்டமிட்டு இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கும் படுபாதகச் செயலைக் கண்டித்து ஆர்ப்பரித்தனர். இன அழிப்பின் கொடுமைகளையும் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு சித்திர வதைகளையும் விளக்கும் சுலோக அட்டைகள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. பேரணி கிளிநொச்சிச் செயலகத்தை அடைந்ததும் 75,000 மக்களினால் கையெழுத்திடப்பட்ட மகஜர் ஐ. நா. செயலருக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. வன்னியில் 34,000க்கு மேற்பட்ட மாணவர்கள் தமது பசியினைப் போக்க பிச்சையெடுக்கும் நிலையையோ அல்லது கூலி வேலை செய்யும் நிலையையோ எதிர்நோக்கி உள்ளனர் என மேலதிக அரச அதிபர் இராசநாயகம் தெரிவித்தார். ✷

# இணைப்பு இல்லை

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கு–கிழக்கு மாகாணங்கள் முழுமையாக இணைக்கப்பட மாட்டாது என சிறிலங்கா அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளதாக 'இந்து' பத்திரிகை செய்தி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பத்திரிகையாளர் மத்தியில் பேசிய சிறிலங்கா சட்டவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தமது அரசின் நோக்கம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவது, அதன் பின்னர் ஆயுதங்களைக் கைவிடல் போன்ற நிபந்தனைகளுடன் தமது தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் முன் வைப்பது என தெரிவித்துள்ளார்.

# விமானம் தாக்கப்பட்டது

கிழக்கில் சிறிலங்கா விமானப்படை விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சீனத்தயாரிப்பு வை –12 ரக இராணுவப் போக்குவரத்து விமானமே தாக்குதலுக்கு இலக்கானதாக ரொய்டர் செய்தித் தாபனம் செய்தி தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு நகருக்குத் துருப்பினரை ஏற்றிச் சென்ற மேற்படி விமானம், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும், விமானம் புகை கக்கியபடி மட்டக்களப்பு விமானப் படைத் தளத்தின் இறங்குதளம் நோக்கி விரைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

# புதிய மருத்துவபீட அனுமதி இல்லை

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையில் இடம்பெற்ற பல்கலைக்கழக ஆளுநர்கள் கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு புதிய மருத்துவ பீட மாணவர்களை அனுமதிப்பதை இடைநிறுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மருத்துவ பீட மாணவர்களுக்கு கல்விவசதியைக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் புதிய மாணவர்களை அனுமதிப்பதில் அர்த்தமில்லை என்பதாலும், ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டில் காணப்படும் இராணுவ கெடுபிடி காரணமாகவும், இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இடம்பெயர்ந்து சென்றிருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேறாவிட்டால் இரு சமூகமும் நிரந்தரமாப் பிளவுறும்

## - அரசியல் அவதானிகள் எச்சரிக்கை

சிங்களப் படைகள் முறிவுப் புள்ளியினை நோக்கி விரைவாகத் தள்ளப்பட்டு வருவதாகவும் மிக விரைவில் தமிழர் தாயகத்தின் முக்கிய பகுதிகளில் சிங்களப் படைகளின் முதுகெலும்புகள் நொறுக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் பலமாகி வருவதாகவும் கூறப்படுகிறது. இதனால், அவ்விதம் சிங்களப் படைகள் மீது பாரிய தாக்குதல்கள் வெற்றிகரமாக நடாத்தப்படும் பொழுது முழுப் படையினரும் பலியாகக்கூடிய பேராபத்து உருவாகி வருவதாகவும், இதிலிருந்து தப்புவதற்கு ஒரேவழி சிங்கள இராணுவத்தின் விலக்கலே எனவும் கூறப்படுகிறது.

அவ்விதம் செய்யாது விட்டால், போரின் உச்ச விளைவாக ஏற்படக்கூடிய விளைவுகள் இலங்கைத் தீவில் சிங்கள – தமிழ் சமூகங்களை நிரந்தரமாகப் பிளவுறச் செய்து விடும் எனக்கூறும் அவதானிகள் இதைத் தவிர்த்து இலங்கைத் தீவில் இரு சமூகங்களுக்கும் இடையிலான உறவுநிலை சுமூகமாவதற்கு ஒரே வழி காலதாமதமின்றி சிறிலங்கா அரசு தனது படைகளை விலக்குவது ஒன்றேயாகும் என்கின்றனர்.

சந்திரிகாவின் 13 போர் பிரகடனங்களும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும் இனியும் விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமான ஒன்றல்ல என எதிர்வு கூறும் அவதானிகள் விடுதலைப் புலிகளுடனான எத்தகைய எதிர்கால உறவையும் ஏற்படுத்துவதானால் ஆக்கிரமிப்பு படைகளின் விலகல் அவசியமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஒன்றாக உள்ளது எனவும் வலியுறுத்தி வருகின்றனர். ✷

# 35 தமிழ்ப்பெண் கைதிகள் உண்ணாவிரதம்

சிறிலங்காப் படையால் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 தமிழ்ப் பெண்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். கொழும்புப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இத்தமிழ்ப் பெண்கள், குற்றம் புரிந்தவர்களை அடைத்து வைக்கப்படும் பகுதிகளில் தம்மை அடைத்து வைத்திருப்பதாகவும் இதனால் தாம் கடும் துன்பங்களை எதிர் நோக்குவதாகவும் உணவு, குடிநீர், படுக்கை போன்ற அடிப்படைத் தேவைகள் போன்றவை கூட செய்து தரப்படவில்லை என்று கூறும் இவர்கள் ஒரு வாரத்துள் தீர்வு காணப் படாவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர். ✷

# இந்திய மீனவர்கள் சுடப்பட்டமைக்கு இந்தியா சிறிலங்காவிடம் அதிருப்தி

சிறிலங்காக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் நால்வரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். தமிழக மீனவர்களின் படகுகளிற்கு மிக நெருக்கமாகச் சென்றே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை சிறிலங்காக் கடற்படை நிகழ்த்தியுள்ளது. இதனால் தமிழ் நாட்டில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்கும் முகமாக இந்திய மத்திய அரசு சிறிலங்கா அரசிடம் தனது அதிருப்தியையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைச் சந்தித்த இந்தியத் தூதுவர் நரேஸ்வர் தயாள், நான்கு மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக உத்தியோகபூர்வ ஆட்சேபனையைத் தெரிவித்தார். இது குறித்துப் பலதடவை சிறிலங்கா அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டமையையும், ஆயினும் இந்த மீனவர் படுகொலை தொடர்கதையானதையும் சுட்டிக் காட்டிய இந்தியத்தூதுவர்

இனிமேல் இத்தகைய நடவடிக்கை தவிர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். ✷

# அதிர்ச்சியைக் கொடுத்த .........

ஏற்படுத்தியுள்ளனர். அதாவது புலிகள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள் என இராணுவத்தரப்பு எண்ணிக் கொண்டிருந்த வேளை பெரிய அழிவுகளை இராணுவத்தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளனர். இது இராணுவத்தரப்பிற்கு அதிர்ச்சியைத் தராமல் வேறு எதைக் கொடுக்கும்?. ஆனால் இராணுவ வட்டாரங்களில் ஏற்படுத்திய அதிர்ச்சியைத் தவிர அரசியல் வட்டாரங்களிலேயே பேரதிர்ச்சி ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் இராணுவத் தலைமை என்னதான் பொய்களைக் கூறிக்கொண்டாலும் இராணுவ வட்டாரங்களில் சிறிதளவேனும் புலிகளின் களநிலபரம் குறித்து அறிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அரசியல் வட்டாரங்களில் அவ்வாறான தகவல்கள் இல்லாமையினால் அவர்கள் அரச தரப்பு வெளியிடும் செய்திகளையே பெரும்பாலும் நம்பவேண்டியுள்ளது. இந்த நிலையில் போர் விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விடும் என அரசாங்க த்தின் மேல் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்கு நூற்றுக் கணக்கான படையினர், புலிகளின் தாக்குதலில் கொல்லப் பட்டுள்ளனர் என்ற தகவல் அதிர்ச்சியளிக்காமல் இருக்க முடியாது. அதிலும் இரண்டு வாரத்துக்குள் பலமான அடிகள் கொடுக்கப்பட்டதால், அரசியல் வாதிகளின் கனவு கலைந்து இருக்கும் எனத் துணிந்து கூறமுடியும். அதிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா போன்று யுத்தம் 80 சதவீதம் வெற்றி பெற்றாகிவிட்டது என்ற பேச்சுக்கு இத்தகவல் பேரிடி போன்று இருப்பதில் ஆச்சரியமில்லை. இந்த வேளை இராணுவ நடவடிக் கையின் போது இவ்வாறான தாக்குதல்கள் இடம் பெறுவது வலிமைதான் என இராணுவத் தலைமைப்பீடம் தோல்வியை மறைக்க முற்படலாம். அதிர்ச்சியைக் காட்டாமலும் விடலாம். இதற்கு அனுசரணையாக மீண்டும் ஜயசுக்குறு ஆரம்பிக்கலாம். ஆனால் இது இராணுவ பின்னடைவை மறைக்க ஒருபோதும் உதவமாட்டாது. அத்தோடு ஜயசுக்குறு நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப் படுமானால் கடந்த இரு தாக்குதல்களை விட மோசமான தாக்குதலை இராணுவம் சந்திக்க வேண்டிவரும். அப்போது அதனைப் பானைக்குள் போட்டு மூடிவிடலாம் என்று எண்ணும் அளவுக்கு விவகாரம் சிறிதாக இருக்கமாட்டாது. அச்சமயத்தில் தமது முழுமையான அறியாமையையும், ஏமாற்றத்தையும் சிறிலங்கா அரச தரப்பு விளங்கிக் கொண்டு இருக்கும். ✷

நன்றி : ஈழநாதம்

www.tamilarangam.net



# நிதி என்னும் போராயுதம்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம், வெற்றியின் கதவுகளைத் தட்டுகின்ற நிலை அடைந்துள்ளது. தரைவழி– இராணுவ நகர்வுகளை பீரங்கிப் படைகொண்டு எதிர்க்கும் வீர வரலாறு, தமிழீழ மண்ணில் ஆரம்பமாகிவிட்டது. கடலிலே இராஜ இராஜ சோழன் காலத்திற்குப் பின்னர் மீளவும் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து தமிழர் பரம்பரை வீரத்தை உலகுக்கு இனம் காட்டத் தொடங்கிவிட்டது. தமிழீழ வானிலே பறக்க முற்படும் எதிரியின் விமானங்கள் தரை விழும் பொற்காலம் பதிவாகிக்கொண்டிருக்கின்றது. சுருக்கமாகச் சொன்னால், யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிப்பதால் – தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முடித்துவிடலாம் என நினைத்த சிறிலங்கா இராணுவத்தின், தமிழீழம் மீதான ஆயுட்காலம் முடிவடையத் தொடங்கிவிட்டது.

புலிகளின் பின்னடைவின் காரணம் புரியாது தவித்த சிறிலங்காவிற்கு இப்பொழுது பித்தம் பிடித்துக்கொண்டிருக்கின்றது. ஆனாலும், இனவெறிச் சித்தம் இன்னமும் குறையவில்லை. இன்னும் 'விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னர் அரசியல் தீர்வு' என்னும் கோஷம் ஓயவில்லை. விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்துதல் என்ற கோஷத்துடன் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர் உடமைகளின் மீது சிறிலங்கா காட்டுமிராண்டித்தனமான இராணுவச் சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு மகிழ்கின்றது. இது மாறுவதானால், எந்த இராணுவத்தைக் கொண்டு சிறிலங்கா அரசு எமது மக்களை நொருக்குகிறதோ, அந்த இராணுவத்தின் கழுத்து நெரிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் எமது தமிழ் மக்கள் நசுக்கப்படுவது தவிர்க்கப்படும்.

சிறிலங்கா இராணுவம் சிறிலங்கா அரசால் படுகடன், வெளிக்கடன், துணைக்கடன், உதவிக்கடன் எனப் பல்வேறு கடன்களால் நிதியீட்டம் செய்யப்படுகிறது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துக்கு என்று உலகை ஏமாற்றி எடுக்கும் கடன்களும் உதவிகளும் கூட சிறிலங்கா படைகளுக்கு மறைமுக நிதியீட்டமாக மாறுகின்றது. சிறிலங்கா இராணுவத்தில் வறிய சிங்கள இளைஞர்கள் சேருவதற்கு முக்கிய காரணி, சிறிலங்காப் படைகளுக்கு அளிக்கப்படும் சம்பளமும் நிதிவசதிகளுமே! உலகில் எந்தப் படையினருக்கும் கொடுக்கப்படாத கவர்ச்சியான நிதிவசதிகள் சிறிலங்காப் படையினருக்கு கொடுக்கப்படுவதும் இல்லாமல், அவர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கையில் இறந்தால் அவர்களது சம்பளம் குடும்பத்தினருக்கு– இறந்தவர்க்கு ஓய்வுபெறும் வயது வரும்வரை– தொடர்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, சில ஆய்வாளர்கள் சிங்கள கிராமப் புறங்களில்– சிறிலங்கா திட்டமிட்ட வகையில் வறுமை தோன்ற, உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வைத்து – சிங்கள இளைஞர்கள் படைகளில் சேர்வதற்குத் தூண்டுகிறது என்கிறார்கள்.

ஆயுத கொள்வனவிலும் இராணுவ தளபாட கொள்வனவிலும் சிறிலங்கா நிதியை கொட்டுகிறது. சுருக்கமாகச் சொன்னால், நிதியும் சிறிலங்காவால் போராயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மேல் திணிக்கப்பட்டுள்ள யுத்தத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டு ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீட்க வேண்டியவர்களாக உள்ளனர். இதற்கான நிதிவழத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழர்களாலேயே அளிக்க முடியும். அதேவேளை, காலத்துக்குக் காலம் சிறிலங்கா அரசின் நன்கு திட்டமிடப்பட்ட இராணுவம் மூலமான இன அழிப்பு – இராணுவ நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் புலம்பெயரும் நூறாயிரக் கணக்கான மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து, வதிப்பிட தேவைகளை மட்டுமல்ல அவர்களது எதிர்கால வாழ்வுக்கான திட்டங்களை – அவர்களது பள்ளிப்பருவ குழந்தைகளின் கல்வி வசதிகளை, எல்லோர்க்குமான வைத்தியசாலை வசதிகளை –ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் தமிழீழத் தேசிய அரசான தமிழீழ விடுதலைப் புலியினர்க்கு உண்டு. இதனால், இரட்டிப்பான நிதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இயல்பாகவே தேவையாக உள்ளது.

அதேவேளை, தமிழீழத்தின் விடுவிக்கப்பட்ட பகுதிகள் விவசாயம் மூலமான பொருளீட்டலையோ அல்லது உட்கட்டுமான திட்டமிடல் மூலமான பொருளாதார வளர்ச்சியையோ பெற முடியாது காலத்துக்குக் காலம் விளைச்சல் நிலங்களுடன் கூடிய பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு பொருள்வளம் நாசமாக்கப்படுகின்றது. சந்திரிகாவின் யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புக்கூட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான பொருள் வளத்தை முறிக்க வேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டுள்ளது. சர்வதேச ரீதியிலும் நிதி உதவிகளைக் குறைக்க சந்திரிகா கடும் முயறச்சிகளை மேற்கொண்டு வருகிறார். சந்திரிகாவின், நிதியை போராயுதமாக்கும் இம்முயற்சியை முறியடிக்க ஒரேவழி எமது மக்களுக்கான நிதிக் கணிப்பை நாம் அதிகரிப்பது ஒன்றே. காலதாமதம் இன்றி உடன் இது செய்யப்படுமானால், சந்திரிகா, நிதியை போராயுதமாகப் பயன்படுத்தும் தன்மையை முறியடித்து, தமிழீழம் மலர்ந்து மக்கள் அமைதி பெறுதல் விரைவுபெறும். ✷

# மீண்டும் ஓட்டம்

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை சுற்றி வளைத்துப் பிடித்துத் தண்டனைக்கு உட்படுத்துமாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றொகான் தலுவத்த உத்தரவு இட்டுள்ளார். இராணுவத்தளபதியின் இவ் உத்தரவு சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடம் எதிர் நோக்கும் ஆளணி நெருக்கடியின் வெளிப்பாடு என்றே கூறமுடியும்.

90களின் ஆரம்பத்தில் இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் இருந்து ஆயிரக்கணக்கானோர் தப்பி ஓடினர். இது சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் ஆளணி நெருக்கடியை ஏற்படுத்தியது. அத்தோடு சிங்கள சமூகத்திலும் குழப்பங்களையும் நெருக்கடிகளையும் அது உருவாக்கியது. ஆனால் தப்பியோடியவர்களில் கணிசமானவரை மீண்டும் இராணுவத்தில் இணைந்து செயல்பட தீவிரமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் ஜெயசுக்குறு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொண்ட துருப்புக்களும் பெருமளவில் பங்குபற்றினர். ஆனால் ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கையானது எதிர்பார்த்தமாதிரி சிறிலங்கா இராணுவத்திற்கு இலகுவாக இருக்கவில்லை. சிங்கள இராணுவம் தமது படையெடுப்பு ஒன்றில் இதுவரை சந்தித்திராத அளவு பெரும் இழப்பினைச் சந்திக்க வேண்டி வந்தது. இந்த நிலையில்தான் தற்பொழுது இராணுவத்தில் இருந்து மீண்டும் தப்பியோடுபவர்களின் எண்ணிக்கை கூடத்தொடங்கியது. இவ்வாறு தப்பியோடுபவர்களில், தனியாக முன்னர் இவ்விதம் இராணுவத்தில் இணைந்து மீண்டும் தப்பியோடுபவர்கள் தான் அடங்கியுள்ளன என்பதல்ல. புதிதாக இணைந்துள்ள பலரும் தப்பியோடியுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. ஆனால் ஜெயசுக்குறு ஆரம்பித்தபின் எவ்வளவு படையினர் தப்பியோடியுள்ளனர் என்பது பற்றி எதுவிதமான தகவல்களும் இல்லை. புலிகள் மேற்கொண்ட இரு பதிலடித்தாக்குதலின் போதும், பல நூற்றுக்கணக்கான துருப்புக்கள் தப்பி ஓடியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. இப்போது தப்பியோடியவர்கள் மீது இராணுவத்தளபதி கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பதில் இருந்து விவகாரம் உக்கிரமாக மாறியுள்ளது என்றே கூறலாம். இதேசமயம் ஜயசுக்குறு படை நடவடிக்கையில் பொலிசாரைத் துணையாகப் பயன்படுத்துவதற்கு சிங்களப்பாதுகாப்பமைச்சர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# அதிர்ச்சியைக் கொடுத்த தாக்குதல்.

விடுதலைப் புலிகளின் மனோபலத்தையும், உறுதியையும் அழித்துவிட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும் உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*வே. பிரபாகரன்.*

பெரியமடுவில் கடந்த 24.06.97 இரவு விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலானது, சிறிலங்கா இராணுவ, அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இவ்வாறான ஒரு அதிர்ச்சி ஏற்பட்டமையானது ஆச்சரியம் அளிக்கக் கூடியதொன்றல்ல. அவ்வாறு ஏற்படாது விட்டால் தான் அது வியப்புக்குரியதாகும். ஏனெனில் பெரியமடுவில் புலிகள் நடத்திய தாக்குதல் அத்தனை முக்கியமாகும்.

சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் விடுதலைப் புலிகள் குறித்தும் அவர்களின் போர் தந்திரோபாயம் குறித்தும் எந்தக் கருத்தை, மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் எனக் கூறிவிட முடியாது. அதாவது அவர்கள் வெளியே கூறுவது போன்ற கருத்தினையா? அன்று வேறு கருத்தினையா? தமது உள்மனத்திற் கொண்டுள்ளனர் என்பது எவர்க்கும் தெரியாது. ஆனால் அவர்கள் எவ்வாறான அபிப்பிராயத்தையும் மதிப்பீட்டையும் கொண்டிருப்பினும் சரி பெரியமடுவில் சிறிலங்காப் படையினர் பலமான ஒரு அடியில் உட்பட்டதில் வியப்பில்லை. ஏனெனில் சரியாக இரண்டு கிழமைக்கு முன்னர் இராணுவத்திற்குப் பேரழிவை ஏற்படுத்திய தாக்குதல் ஒன்றை தாண்டிக்குளத்தில் நடத்திய விடுதலைப் புலிகள் இந்தளவு விரைவில் மற்றுமொரு தாக்குதலை நடத்தும் அளவுக்கு ஆற்றல் கொண்டுள்ளமைக்கு இராணுவத்தரப்புக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளமையாகும். யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் பின்னர் புலிகள் விலத்திச் சென்றபோது "புலிகள் பலவீனப்பட்டுப் போய்விட்டனர்" என்றே பலரும் கருதினர். அரசாங்கத் தரப்பும் புலிகள் அழிக்கப்படும் காலம் வந்துவிட்டது எனப் பிரச்சாரம் செய்தபோது, முழுமையாகக் கூறுவதானால், எம்மவர்கள் கூடப் புலிகள் பலவீனப்பட்டுவிட்டதாவே கருதினர். இந்த நிலையில் புலிகள் இரண்டு வார இடைவெளியில் இரு பாரிய தாக்குதல்களை உக்கிரமாக நடத்தி இராணுவத்தரப்பில் பேரழிவை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

www.tamilarangam.net



# சிங்களக் கடற்படையினர் மீள அழைக்கப்பட்டனர் கடற்புலிகளின் தாக்குதல் எதிரொலி

ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட நிலையில், ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கைக்கென கொண்டுவரப்பட்ட கடற்படையினர் தற்போது திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். வட–தென் தமிழீழ கடற்பரப்புகள் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் விழுவதை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென சிறிலங்காப் படையினர் பெரும் பகீரதப் பிரயத்தனங்களில் இறங்கி வருவதாக அவதானிகள் கருதுகின்றனர். அதேவேளை, பெரும் வலிமையுடன் கடற்புலிகள் தமது நடவடிக்கைகளை வேகப்படுத்தி வருவதை சமீப கால நிகழ்வுகள் வெளிப்படுத்தி நிற்பதாகவும் அவதானிகள் கருதுகின்றனர். இதனால், அவநம்பிக்கையும் மனச்சோர்வும் அடைந்துள்ள சிறிலங்கா கடற்படையினருக்கு உற்சாகமூட்டும் முயற்சியாகவே இந்த ஜெயசுக்குறு கடற்படையணியை திருப்பி எடுத்துள்ளதாக நம்பப்படுகிறது. இருந்த போதிலும், கடற்புலிகளைக் கட்டுப்படுத்தும் தன்மையை சிறிலங்கா கடற்படையினர் வெகுவாக இழந்துவிட்ட நிலையில்– வான்படையும் பலத்த சேதங்களுடன் தள்ளாடும் நிலையில்– சிறிலங்கா கடற்படையினரால் அப்பாவித் தமிழ் மீனவர்களை வேட்டையாட முடியுமே தவிர, கடற்புலிகளின் வலிமைக்கு எதிர் நிற்கவே முடியாது என களத்தின் தன்மைகளை நேரடியாக அவதானிப்பவர்கள் கருதுகின்றனர். ✵

# சிறிலங்காப் படை தள்ளாடுகிறது பொது மன்னிப்பாலும் பயனில்லை சட்டநடவடிக்கை என மிரட்டல்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மேலும் மேலும் இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக ஆட்களைத் திரட்டும் முயற்சியில் இறங்கிய சிறிலங்காப் படைத் தலைமைகள் அதற்குப் போதிய ஆதரவு கிடையாத நிலையில் படைகளிலிருந்து விலகி ஓடியவர்களின் காலில் விழுந்தனர். பொது மன்னிப்பு தருகின்றோம், சேவை தொடர வழி செய்கின்றோம் என்றெல்லாம் சிறிலங்கா அரசு கவர்ச்சி மொழிகள் பேசியபோதிலும் படைகளிலிருந்து விலகி ஓடியவர்களில் மிகச் சொற்பமானவர்களே படையில் மீள இணைந்துள்ளனர். இதனால், ஏனையவர்கள் படைகளில் மீண்டும் சேராவிடின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சிறிலங்கா அரசு அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது. ஆயினும் தலைமறைவாக உள்ளவர்களைத் தேடிக் கண்டுபிடித்து எப்போது சட்ட நடவடிக்கைக்கு அரசு ஆளாக்கப்போகிறது என அவதானிகள் கேலி செய்கின்றனர்.

இதேவேளை, படையிலிருந்து தப்பியோடிய பலர் இன்று வெளிநாடுகளில் வேலை பார்ப்பதாகவும், அதிலும் குறிப்பாக விமானப் படையினர் பலர் வெளிநாட்டு விமானக் கம்பனிகளில் வேலை செய்வதாகவும் இவர்களை எப்படி மீளவும் சேவையில் சேர்க்கலாம் என சிறிலங்கா அரசு கடுமையாக ஆலோசித்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே சிங்களக் கிராமங்களில் சிறிலங்கா அரசு திட்டமிட்ட வகையில் உணவுத் தட்டுப்பாடு, வேலையின்மை என்பவற்றை ஏற்படுத்தி இளைஞர்களை வறுமை காரணமாக, பட்டினி நிலை காரணமாக படையில் சேருவதற்கான அழுத்தங்களை அதிகளவில் பிரயோகித்து வருவதாக நடுநிலை அவதானிகள் செய்தி வெளியிட்டுள்ளனர். ✵

# விடுதலைப் புலிகளின் பலமுனை......

தெரிவித்துள்ளார். இது குறித்த தலைமைப் பீடச் செய்திகள் இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை- கிடைக்கப் பெறவில்லை.

தென்மராட்சியில் ஆக்கிரமிப்புப் படைமீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் மூலம், ரோந்து சென்ற இராணுவ அணி மீது நடாத்திய தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர். ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் சிறிலங்கா இராணுவத்தின் ரோந்துப் பிரிவொன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் புலிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் குண்டொன்று வெடித்ததில் இரு இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. காலை உணவுக்குப் படையினர் உட்கார்ந்திருந்த வேளையிலேயே குண்டு வெடித்ததாகவும் முகாமிற்கு விநியோகிக்கப்பட்ட பாணுடன் சேர்த்து விடுதலைப் புலிகளால் குண்டும் அனுப்பப்பட்டிருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறித் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பதாக ஏ.எப்.பி செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நாவலடி இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர். நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் அறியப்படவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் சிங்களப் படைமீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என அறியப்படுகிறது. வீதித் தடை அகற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடாத்தினர் எனவும் இரு இராணுவத்தினர் கொல்லப்பட, மேலும் ஐவர் காயமடைந்தனர் எனவும் சர்வதேச செய்தித் தாபனங்கள் செய்தி தெரிவிக்கின்றன.

இவ்வாறாக விடுதலைப் புலிகளின் பரவலான தாக்குதல்கள் வெற்றிகரமாக நடைபெறுவதினால், சிங்களப் படை மனக்கிலேசத்துடன் போராடும் வலிமை குன்றிக் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ✵

# விடுதலைப் புலிகளைக் காட்டி......

கடந்த 2–7–97இல் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

## முஸ்லிம் தலைவர்களின் கோரிக்கைக்கு பதில்

கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி முஸ்லிம் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது:

'ஆயுதம் மற்றும் சயனைட் வில்லைகளை இழந்த நிலையில் கரைசேர்ந்த எமது விடுதலைப் போராளிகளைத் தாக்கி இராணுவத்திடம் பிடித்துக் கொடுத்த மனித நேயமற்ற செயலை கண்டனம் செய்கின்றோம். இது குறித்து எமது ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கின்றோம். இவை மிகவும் விரும்பத்தகாத செயல்கள்– இனிமேலும் நடைபெறாமல் இருக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இராணுவத்திடம் பிடித்துக்கொடுக்கப்பட்ட போராளிகளின் விடுதலைக்கு ஆவன செய்யும் பட்சத்தில் எம்மிடம் மிகுதியாயுள்ளவர்களை விடுவிக்க ஆவன செய்வோம். ✵

## கனடா வழக்கு.... இன்றுவரை அமெரிக்காவில் ....

செய்கின்றன என எண்ணியது. இந்த நிலைப்பாடு Reign of virtue in Roespierre காலத்தில் திகில் என்ற வார்த்தைக்கு வரலாற்று ரீதியாக கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்துக்கு ஒத்ததாக இருந்தது.

கேள்வி: அந்தமட்டில் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட நிபுணர்கள்......முதலில் அது ஒரு மாநாடே அல்ல. நீங்கள் சொன்னதில் இருந்து நான் விளங்கிக் கொள்வது என்னவென்றால், நீங்களே இந்த ஆவணத்தை வரைவதாக இருந்தால் இப்படி வரைந்திருக்க மாட்டீர்கள்?

பதில்: ஒரு புலமையாளன் என்ற முறையில் எனது கருத்துக்களை இதற்கு முந்திய அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறேன்.

தொடரும்.....

## தமிழ்நாட்டில் கண்டன ஊர்வலம்

சிறிலங்கா கடற்படையால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொள்ளப்பட்டதைக் கண்டித்து 28–07–97 அன்று சென்னையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு, கண்டன ஆர்ப்பாட்டத்தை நடாத்தியுள்ளனர். அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகள், அமைப்புக்கள் என்பன இப்போராட்டத்தில் கலந்து கொண்டன. சிறிலங்கா உதவித் தூதராலயத்திற்கு முன்னால் இப்போராட்டம் நடாத்தப்பட்டது. ✵

# புலிகளின் கட்டுப்பாட்டில் .......

இருக்கவில்லை என்றும் விபரித்த அவர்கள் தற்போது சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் நிலமை தலைகீழாக உள்ளது எனக்கூறி தமது ஏக்கத்தை வெளியிட்டுக் கொண்டனர்.

சிறிலங்கா அரசாங்கத்தால் பிரச்சாரத்திற்காக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பேட்டியில் யாழ் குடாநாட்டு விவசாயிகள் தமது வாழ்வின் உண்மை நிலைகளை எடுத்து விளக்கியதினால் சிறிலங்கா அரசாங்கம் அதிர்ந்து போயுள்ளது. இராணுவப் பிடியிலுள்ள குடாநாட்டு நிலமையை வெளியரங்கமாக நேரடி ஒலிபரப்பில் யாழ் விவசாயிகள் வெளியிட்டதை அடுத்து இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள்மேல் சிறிலங்காவின் ஆத்திரம் திரும்பி உள்ளது. சிறிலங்கா அரசாங்கம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் மேல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ✵

# மீண்டும் ஓட்டம்....

மேற்கொண்ட நடவடிக்கையானது ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிசார் விலகவோ அல்லது தப்பியோடவோ காரணமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதில் பொலிசாரின் நிலை இராணுவத்தினரின் நிலையில் இருந்து மாறுபட்டதாயினும் ஆயுதப்படையிலுள்ள சிங்களவரின் மனோநிலையை வெளிப்படுத்தும் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. ஆனால் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுபவர்களை இரணுவப் பணிப்பொன்றினால் தடுத்து நிறுத்த முடியுமா என்பது கேள்விக்குரியதாகும். இவ்வாறு தப்பி ஓடுபவர்கள் சிங்கள அரசு வழங்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் ஊதியம் மற்றும் சலுகைகள் என்பவற்றை இழப்பதற்குக் கூடத் தயாராக உள்ளனர். இந்த நிலையில் இராணுவ நீதிமன்றத்தால் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தப்பியோடுபவர்கள் தயாராக உள்ளனர் என்றே எதிர்பார்க்கலாம். ஏனெனில் தமது உயிர், அங்கங்கள் இழப்பதை விடவும் நீதிமன்றத்தின் தண்டனை பெரிதாக இருக்கப் போவதில்லை என்று அவர்கள் கருதக்கூடும். இந்த நிலை படையில் இருந்து தப்பி ஓடியவர்களை இராணுவத்தினாலோ அன்றி பாதுகாப்பு அமைச்சினாலோ இலகுவாகக் கையாளக் கூடிய ஒரு விடயமாக இல்லை. ஏனெனில் கூலிக்காக அவர்கள் உயிரை இழக்கவோ அன்றி அவய உறுப்புக்களை இழக்கவோ தயாராக இருக்கமாட்டார்கள். வெற்றி என்ற ஒரு மாயையில் படையில் சேர்ந்தவர்களுக்கு நேரடிப் போர் அனுபவங்கள் உண்மையை உணர்த்தப் போதுமானவையாகும்.

நன்றி : ஈழநாதம்

www.tamilarangam.net



# மலையே வந்தாலும் நிலைகுலையாது தலையெடுக்க தமிழீழ இராணுவம் வன்னிக்களத்தில் ஆயுதபாணியாய் நிற்கிறது!

பத்தாயிரம் சிங்களச் சிப்பாய்கள் செத்தாலும் பரவாயில்லை. நூறு புலிகளையாவது கொன்றொழிக்க வேண்டும். இதுதான் சிங்கள–பௌத்த பேரினவாதிகளின் காட்டுக் கூச்சலாக இருக்கிறது. குறிப்பாக மருமகள் சந்திரிகா–மாமா அனுருத்த ரத்வத்த இந்த இருவரதும் 'கர்ச்சனை'யாக இருக்கின்றது.

'யுத்தத்தில் யாரும் வெற்றி பெறுவதில்லை எல்லோரும் தோல்வி அடைபவர்கள்தாம்'. "நான் அரசியலுக்காக கணவனை இழந்தவள். இரண்டு குழந்தைகளின் தாய். உயிர் எவ்வளவு பவித்திரமானது என்பது எனக்குத் தெரியும். தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் நாட்டில் யுத்தத்தினால் எற்படும் உயிரழிவுகளுக்கு முற்றுப் புள்ளிவைத்து நாட்டில் ஓடும் இரத்த ஆறுக்கு முடிவுகட்டுவேன்."

"யுத்தத்தை சிங்களமக்கள் விரும்பவில்லை. யுத்தத்தினால் இலாபம் பெறும் இராணுவ உயர்அதிகாரிகளே யுத்தத்தை தொடர முனைகிறார்கள்."

இப்படியான வாக்குறுதிகளை அள்ளி வீசித்தான் சந்திரிகா ஆட்சிக் கதிரையை பிடித்தார். ஆனால் இன்று மூன்று வருடங்கள் கழித்து தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சந்திரிகாவின் மூன்று ஆண்டு ஆட்சியில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்பு, உடமை இழப்பு அதற்கு முந்திய பத்து ஆண்டுகால இழப்புக்களை விட பலமடங்கு அதிகரித்துள்ளது.

சுற்றிவளைப்பு,

கைது,

சிறையில் சித்திரவதை,

சிறையில்ஆண்டுக்கணக்காக விசாரனையின்றி தடுத்துவைத்தல், சட்டத்துக்கு அப்பாற்பட்டகொலைகள்,

கைது செய்யப்படுபவர்கள் காணமல் போதல், தமிழ்பெண்களுக்கு எதிரான பாலியல்வன்முறை சந்திரிக்காவின் ஆட்சியில் முன்னொருபோதும் இல்லாத வாறு இடம் பெற்றுள்ளது. இடம்பெற்றும் வருகின்றது.

இத்தனை உயிரழிவுகள், உடமையழிவுகளுக்குப் பிறகும் சிங்கள பௌத்த பேரினவாதப் பேயின் 'பசி' அடங்கியதாக இல்லை. மேலும் மேலும் அப்பேய் உயிர்ப்பலி கேட்கிறது. பச்சை இரத்தம் குடித்திடத் துடிக்கிறது.

அதன் வெளிப்பாடே 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கை.

பெரிய ஆரவாரத்துடன், பீரங்கிகளின் முழக்கம், குண்டுவீச்சு விமனங்களின் இடியோசையோடு ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி நிச்சயம்' இன்று கேள்விக்குறியாகி விட்டது.

வெற்றி நிச்சயம் யாருக்கு? சிறிலங்கா இரணுவத்துக்கா? விடுதலைப்புலிகளுக்கா? என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

கடந்த யூன் மாதம் 9ம் திகதி தான்டிக்குளம் படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய மின்னல் வேகத் தாக்குதலினால் சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பு வளைக்கப்பட்டது.

அதே யூன் 24ம் திகதி பெரியமடு படைமுகம் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய புயல்வேகத் தாக்குதலினால் சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் தாண்டிக்குளம்– நொச்சி மோட்டை தாக்குதல் போலவே இந்தத் தாக்குதலும் இரண்டு முனைகளில் மேற்கொள்ளப்பட்டது.

பெரியமடுவில் 53வது இராணுவப்பிரிவு மீது விடுதலைப் புலிகளின் ஒரு அணிதாக்கியது. இன்னொரு அணி இரம்பைக் குளத்தில் (வவுனியா–கிளிநொச்சி நெடும்பாதை) 55வது இராணுவப்பிரிவு மீது தாக்குதல் தொடுத்தது.

வழமையாக விடுலைப்புலிகளின் தாக்குதல்கள் பின் இரவு 1 மணிக்கு மேல்தான் ஆரம்பமாகும்.

ஆனால் இம்முறை முனனிரவு 11 மணிக்கு தாக்குதல் ஆரம்பமாகியது.

இந்தத் தாக்குதலை நான் விபரித்தால் உயர்வு நவிற்சி என்ற குற்றத்திற்கு ஆளாக நேரிடலாம்.

எனவே சிறிலங்கா அரசிற்கு வக்காலத்து வாங்கும் 'சண்டே ரைம்ஸ்' யூன் 29 திகதிய பத்திரிகையில் இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் அழுதழுது விபரித்திருப்பதை அப்படியே தருகிறேன்.

"whilst launching this counter attack on the main axis, Tiger guerrillas also made a simultaneous strike on the supporting flank at Periyamadhu, on troops of the 53 division. It appeared to be a move to pin them down and thus prevent re-inforcements rushing to the main axis.

Contrary to news reports in the past weeks, the 55 and the 53 division are yet to reach Puliyankulam and link up. Interesting enough, the Tiger guerrillas travelles through the gap between the advancing columns to carry out the second counter attack.

The LTTE leader Vellupillai Pirabaharan, named it 'Operation Do or Die - Two' military officials said a guerrilla force of some 400 was involved in the counter attack whilst a lesser number, estimated around 250, took part in the strike at Periyamadhu.

At Pannikanaruvi, the defences were manned by troops of the Vijaya infantry battalian. It was passed 11 pm. Tuesday when rocket prpelled grenades and a small arms fire began to rain on the defences of the eastern flank. Company commander Captain L.Silva, who mustered a few men and moved forward to face the onslaught was cut down by fire.

Attackers who infiltrated the defences, like during the previous counter strike, had been pre-assigned specific task. One group headed mortar battery, another towards the armoury and yet others towards a fleet of vehicles. Heavy fighting broke out as more guerrillas broke in.

Sensing that the guerrillas eyed the mortar battery, men there began dismantling the 120 mm mortar launchers. When they began hiding the mortar tubes, the Tiger cadres had arrived in the area. They seized one tube at 5 mortar launching plates out the rest had by then hidden.

In effect the have captured one complete 120 mm mortar launcher unit and four launching plates. They also seized a quantity of mortar shells, arms and ammunitions.

Military officials said they exploded 500 rounds of mortar shells to prevent it from falling into the hands of the enemy. They denied and LTTE claims that four 80 mm mortar launchers had also been captured but conceded that a Double Cab and two trucks were seized.

The bitter fighting continued till well past 3 am. Wednesday after which Tiger cadres, who broke in from the East made the exit through the West. This was in marked contrast to the attack on the Thandikulam - Nochchimodai defences where they broke their way through the western flank and exited through the East.

As dawn broke on Wednesday the advancing column on the main axis was isolated.

தாண்டிக்குளத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் மேற்குப்பக்கத்தில் இருந்து ஊடுருவி கிழக்குப் பக்கத்தில் வெளியேறினார்கள்.

பெரியமடு– இரம்பைக்குளம் தாக்குதலில் கிழக்குப் பக்கத்தில் ஊடுருவி மேற்கு பக்கத்தில் வெளியேறினார்கள். இதில் இன்னொரு வேடிக்கை தாண்டிக்குளம் தாக்குதல் இராணுவம் முற்றிலும் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் நடந்தது. ஆனால் பெரியமடு–இரம்பைக்குளம் தாக்குதல் முற்றிலும் எதிர்பார்க்கப்பட்டதாம்.

இராணுவ உளவுத்துறைப் பொறுப்பாளர் நடக்கவிருக்கும் தாக்குதலைப்பற்றி இராணுவ உயர் பீடத்தை நேரகாலத்தோடு எச்சரிக்கை செய்திருந்தாராம். அப்படியிருந்தும் தாக்குதல் ஆரம்பித்தவுடன் முன் காவலரணில் கடமையில் இருந்த விஜயபாகு காலாற்படையினர் தலைதெறிக்க ஓடித் தப்பித்துக் கொண்டனர்.

இன்னுமொரு வேடிக்கை இந்த இரண்டு தாக்குதல்கள் நடந்த தினத்திற்கு முதல் நாள் தான் கொழும்பிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கொள்கலன்களில் (Containers) வந்திறங்கியதாம்.

இதனால் இராணுவத்திற்கு உள்ளிருந்து இராணுவ இரகசியங்கள் விடுதலைப் புலிகளுக்குப் போய்ச் சேருவதாக இராணுவ உயர்பீடம் சந்தேகிக்கிறது.

தோல்வி மேல் தோல்வி ஏற்படும்போது இப்படியான சந்தேகம் வளரவே செய்யும்.

இராணுவத்திற்கு யாரைப்பார்த்தாலும் விடுதலைப்புலிகளாகவே காட்சியளிக்கின்றனர்.

வடகிழக்கில் மட்டுமல்ல, கொழும்பு, கண்டி, காலி எங்கும் தமிழர்கள் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் நாளும் பொழுதும் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டு அடைக்கப்படுகிறார்கள்.

இப்போது யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு இராணுவ இரகசியங்களை கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் எட்டு முஸ்லீம் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

***இரண்டு பாரிய அதிரடித் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக நடாத்தி எதிரிப் படையின் முதுகெலும்பை முறித்தாலும் அதற்கு விடுதலைப்புலிகள் கொடுத்த விலையையும் குறைத்து மதிப்பிடு வதற்கில்லை.***

பொதுவாக ஒரு கெரில்லாத் தாக்குதலில் ஆள் இழப்பு விகிதாசாரம் 1க்கு 6ஆக, (கெரில்லா–1. எதிரிப்படை–6) இருக்கவேண்டும். இந்த விகிதாசாரம் குறைந்தால் அது இழப்பாகவே கருதப்படும்.

இதற்கு இரண்டு காரணங்களை கூறலாம்.

ஒன்று. விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல்கள் முற்றிலும் கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களாக அமையாமல் மரபு இராணுவத் தாக்குதல்களாகவும் இருப்பது.

**- நக்கீரன் -**

இரண்டு. எதிரிப்படையிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களை பறிக்க வேண்டியிருப்பது.

தாண்டிக்குளத்தைவிட கூடுதலான ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் விடுதலைப்புலிகள் இம்முறை 'அள்ளி'ச்சென்றிருக்கின்றார்கள்.

120மிமீ ஆட்டிலறி 1,

80மிமீ ஆட்டிலறி 2,

பீரங்கிக்குண்டுகள் 1000,

வாகனங்கள் 4

இவை ஆயுத தளபாடங்களின் முழுப்பட்டியல் அல்ல. மொத்தம் 2000 கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இந்தப் பாரிய இழப்புக்களை அடுத்து 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது எந்த விநாடியும் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம்.

இழந்த ஆயுத தளபாடங்களை ஈடுசெய்ய ஆயுத தளபாடக் கொள்வனவுக்கு இராணுவ அதிகாரிகள் சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் நாடுகளுக்குப் பறந்து சென்றுள்ளார்கள். இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முயற்சியும் மும்முரமாக நடக்கிறது. இதற்காக கல்வி, வயது போன்ற தகைமைகள் குறைக்கப் பட்டுள்ளன.

சந்திரிகாவையும், அனுருத்த ரத்வத்தையையும் பொறுத்தளவில் இந்த யுத்தம் கௌரவப் பிரச்சனை.

சந்திரிகா தன்னை விகாரமாதேவி போலவும், ரத்வத்தை தன்னை நவீன துட்டகை முனுவாகவும் பாவனை செய்கிறார்கள்.

சமஸ்தா லங்கா பவித்தி சங்விதாணய என்ற புத்த தேரர்களின் அமைப்பு விடுதலைப் புலிகளை "படையெடுப்பாளர்கள்" (Invaders) என்று வர்ணித்துவிட்டு சிறிலங்காவின் முப்படையும் இந்தப்படையெடுப்பாளர்களுக்கு எதிராக பெரிய தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று அறிக்கை மூலம் கேட்டுள்ளது. இல்லாவிட்டால் மீண்டும், சோழர்களின் மேலாதிக்கம் சிறிலங்காவில் ஏற்பட்டு விடும்.

கஜபாகு, துட்டகைமுனு, விஜயபாகு மாதிரி எதிரிப்படைகளை நரங்கள் துவம்சம் செய்யவேண்டும்.

இதற்காக சிங்களப்படைக்கு மும்மணிகளின் ஆசீர்வாதத்தை வேண்டி போதி பூஜை, பிரித் மற்றும் வழிபாடுகள் செய்யவேண்டும் என இந்தப் புத்ததேரர்களின் அமைப்பின் செயலாளர் வண. வத்தினபக சோமானந்த தேரேர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புத்த மதத்தில் வழிபாடில்லை. கடவுள் நம்பிக்கையுமில்லை.

ஆன காரணத்தால் தான் வயிற்றுக்குற்று, காய்ச்சல், சன்னி என்றால் ஓன்றில் கதிர்காமத்துக்கு ஓடுகிறார்கள். இல்லாவிட்டால் முனீஸ்வரத்திற்கு ஓடுகிறார்கள்.

சந்திரிக்கா, அனுரத்த, சிறீமாவோ, அனுரா போன்றோர் பூட்டபத்திக்கு யாத்திரை போய் சாயிபாபாவிடம் ஆசீர்வாதம் பெற்றுத் திரும்புகிறார்கள்.

எனவே சிறிலங்கா இராணுவத்திற்கு மும்மனிகளின் ஆசீர்வாதம் கிடைக்கப் போவதில்லை.

***விடுதலைப்புலிகள் ஆளணி, ஆயுத தளபாடவளம் அதிகம் இல்லாதபோதும் அவர்களிடம் தேசபக்தி கொழுந்துவிட்டு எரிகிறது.***

எல்லை தாண்டிவந்த சிங்கள இராணுவத்தை துவம்சம் செய்துவிட ஒவ்வொரு விடுதலைப்புலி வீரனும் எதிரிமீது துப்பாக்கிக்குண்டுகள் போல் பாய்கிறான்.

வெற்றி நிச்சயம் சிங்கள இராணுவத்திற்கல்ல, விடுதலைப்புலிகளுக்கே "வெற்றி நிச்சயம்".

மலையே வந்தாலும் நிலைகுலையாது தலையெடுக்க தமிழீழ இராணுவம் வன்னிக்களத்தில் ஆயுத பாணியாக நிற்கிறது.

***வெற்றி நிச்சயம்.***
***பயமில்லை தமிழா!***
***தம்பியின் தலைமையில்***
***விடுதலை உண்டு!!***

www.tamilarangam.net



# இன்றுவரை அமெரிக்காவில் பயங்கரவாதக் குற்றம் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகக் கருதப்படுவதில்லை

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச் சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை மார்ச் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. கனடா இணைப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கில் சுரேஷ் அவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

1) திரு. சுரேஷ் அவர்கள் பயங்கரவாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது. அந்த இயக்கம் பயங்கரவாதத்தில் ஈடுபடக்கூடும் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது.

2) திரு. சுரேஷ் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

3) திரு. சுரேஷ் பயங்கரவாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் அல்லது இருந்தார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

இங்கே குறிப்பிடப்படும் பயங்கரவாத இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளாகும்.

இதுவரை நடந்த விசாரணையில் கனேடிய அரசு பின்வரும் குற்றச்சாட்டுகளை வற்புறுத்துவதில்லை எனக் கைவிட்டுள்ளது.

திரு. சுரேஷ் அவர்கள்,

அ) கடும் குற்றச்சாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஆ) சிறிலங்காவில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இ) கனடாவில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் அல்லது இராணுவ உபயோகத்துக்கான பொருட்கள் கொள்வனவு செய்தார்.

இவ்வழக்கு விசாரணையை நீதிபதி Teitelbaum நடாத்துகிறார். வழக்கு விசாரணை செப்டெம்பர் 17ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இதுவரை திரு. சுரேஷ் சார்பாக முப்பதிற்கும் மேற்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் அவரின் வழக்கறிஞர்கள் Ms.Barbara Jackman , Lorne Waldman ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**கேள்வி:** இல்லை. இதில் நாங்கள் எல்லோரும் ஒத்துப் போகிறோம். அதாவது, இதுவரை கொடுக்கப்பட்ட சாட்சியம் தெளிவாக இருக்கிறது. குறைந்த பட்சம் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு சர்வதேச ரீதியாக வரைவிலக்கணம் இல்லை என்பதில் எனக்குத் திருப்தி இருக்கின்றது. எல்லா சாட்சிகளும் இதைத்தான் இங்கு என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். அதை நம்பாமல் விடக் காரணம் இல்லை. ஆனால் நான் மீண்டும் எதைச்சொல்ல முயற்சிக்கிறேன் என்றால் பயங்கரவாதம் என்ற சொல்லின் அர்த்தத்தை புரியாத ஒருவர் அதைத் தொடர்ச்சியாக உபயோகிப்பது.

எனவே, நான் நீர் இப்போது சொல்லியதை வைத்து அனுமானிக்கிறேன், நீர் எப்போதாவது பயங்கரவாதம் என்ற சொல்லைப் பாவிக்கும் போது, றீகன் நிர்வாகம் கையாண்ட அர்த்தத்தில் மட்டும் உபயோகிக்கிறீர் முற்றாக வேறு சூழ்நிலையில் அல்ல?

**பதில்:** நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் அவர்கள் அந்தச் சொல்லை உபயோகித்த அர்த்தத்தை நான் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. இதனை நான் பக்கம் 81ன் அடியில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

**கேள்வி:** நான் அதனை அடிக்குறிப்பு 8ல் பார்க்கிறேன், நான் அதனை வெகு விரைவாகப் பார்க்கிறேன்.

.......... நிராகரிக்கப்பட்ட அறிக்கைக்குப் பதிலாக விடுக்கப்பட்ட புதிய அறிக்கை பயங்கரவாதச் செயல்களை இரட்டிப்பாக்கிறது...... இது என்ன? அது சொல்கிறது:

"பயங்கரவாதம் நம்பத்தகாத சாட்சியம். The Economist. . .

இது The Economist சஞ்சிகையா?

**பதில்:** ஆம்.

**கேள்வி:** ஆக அவர்கள் பயங்கரவாதி அல்லது பயங்கரவாதம், மன்னிக்கவும், பயங்கரவாதியல்ல, என்ற சொல்லைப் பாவிக்கிறார்கள். நீர் அதை மேற்கோள் காட்டுகிறபடியால் அது சரியா?

**பதில்:** அவர்கள் பாவித்தார்கள், ஆம்.

**கேள்வி:** எனவே பயங்கரவாதம் என்ற சொல்லைப் பாவிக்கும்போது The Economist யை மேற்கோள் காட்டுகிறீர், காரணம் அப்போது றீகன் நிர்வாகம் இருக்கவில்லை?

**பதில்:** றீகன் நிர்வாகம் அந்தச் சொல்லைப் பாவித்ததால் அதனைக் கண்டிக்கும் எண்ணத்தில் நான் அந்தச் சொல்லைப் பாவித்தேன். எனது எண்ணத்தில் அந்தச் சொல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டது. அதனை நான் சுட்டிக்காட்டினேன். . ... நான் நினைக்கிறேன் கனடாவிலும் அந்தப் பிரச்சனை இருக்கிறது, கனம் நீதிபதி அவர்களே, நீங்கள் அரசு எப்படி அந்தப் பதத்தைப் பாவிக்கின்றது என்பதில் கவனமாக இல்லாவிட்டால், நீங்கள் உங்கள் சிவில் உரிமைகளும், சிவில் சுதந்திரங்களும், சட்ட முறைகளும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுவதைப் பார்ப்பீர்கள். இது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெரிக்காவில் நடந்துள்ளது. நான் அச்சப்படுகிறேன் இது கனடாவிலும் நடக்கப்போகிறது.

**கேள்வி:** அய்யா, கனடாவைப் பற்றிப் பயப்படாதீர்கள். நாங்கள் மிகவும் மேலான சனநாயக நாடு.

**பதில்:** எனக்கு அது தெரியும், நான் சொன்னவாறு. . .

**கேள்வி:** ஆகவே கனேடியக் குடிமக்களுக்காகப் பயப்படாதீர்கள்.

**பதில்:** நான் சொன்னதுபோல எனது குடும்பம் பிரன்சு கனேடியன், எனவே தனிப்பட்ட முறையில் எனக்கு அக்கறை உண்டு.

**நீதியரசர்:** அய்யா, அதைக்கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. வேறு கேள்விகள் என்னிடம் இல்லை. எனது கேள்விகளையிட்டு உம்மிடம் எதாவது கேள்விகள் இருக்கிறதா?

**திரு. வயலன்கோட்:** நான் சிலவற்றைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. வயலன்கோட்டின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

**கேள்வி:** இந்தக் கட்டுரையின் இறுதியில், பக்கம் 103ல் தொடங்கி, பயங்கரவாதம் பற்றிய ஜெனிவா பிரகடணம் இணைக்கப்பட்டுள்ளது. அய்யா, நான் சரியாக விளங்கிக்கொண்டால், உமது குடும்பம் பிரென்சுக் கனேடியன் என்று சொன்னீர். repporteur என்ற வார்த்தை என்றால் re-porter?

**பதில்:** ஆம்.

**கேள்வி:** அதன் அர்த்தம் என்ன? நீர்தான் அந்தப் பிரகடனத்தை வரைவு செய்தீர் அல்லது

**பதில்:** நூறு நிபுணர்கள் கொண்ட ஒரு சர்வதேசப் பேரவை நடந்தது. மூன்று நாள் அந்தப் பேரவை நடந்தது என்று நினைக்கின்றேன். அந்தப் பேரவையில் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்கள் நடந்தது. அவர்கள் பின்பு பயங்கரவாதம் பற்றிய பேரவையின் கருத்தை, பேரவையின் எண்ணங்களை நகல் தீர்மானவுருவில் வரைய ஒரு குழுவைத் தெரிவு செய்தார்கள். நான் அந்த வரைவுக் குழுவின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். வரைவுக் குழு என்னை அதன் அறிக்கையாளனாகத் தெரிவு செய்தது.

**கேள்வி:** மன்னிக்கவும், அதன் தார்ப்பரியம் என்ன? சர்வதேசச் சட்டத்தில் அது ஒரு பொதுவான சொல் என்பது எனக்குத் தெரியும்.

**பதில்:** அதன் தாற்பரியம் என்னவென்றால் அந்தக் குழு உறுப்பினர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்குமாறு, அது மேலும் அந்தப் பேரவை உறுப்பினர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்குமாறு, ஒரு ஆவணத்தைத் தயாரிப்பது எனது வேலையாகும். குழு உறுப்பினர்கள் அந்த ஆவணத்தை அங்கீகரிப்பார்கள். பின் அந்த வரைவு அந்தப் பேரவை உறுப்பினர்களின் விவாதத்துக்கும், கலந்துரையாடலுக்கும் முன் வைக்கப்படும்.

**கேள்வி:** நடைமுறையில் நீர் முதல் வரைவைத் தயாரிப்பீர், அதன்பின் அது உமது சகபாடிகளுக்கும் ஏனைய பேரவை உறுப்பினர்களுக்கும் அதனைச் சமர்ப்பிப்பீர், மற்றும்........

**பதில்:** அங்குள்ளவர்கள் மத்தியில் நீண்ட விவாதத்தின்பின், பேரவை உறுப்பினர்களது கருத்துக்களை இந்த ஆவணத்தில் உள்ளடக்குவதே எனது நோக்கமாக இருந்தது.

**கேள்வி:** உம்மையும் சேர்த்து?

**நீதியரசர்:** நீர் இதோடு ஒத்துப் போனீரா? அதில் என்ன எழுதியிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது, ஆனால் அதில் கையெழுத்திட்டிருக்கிற, படியால் அதனை ஏற்றுக் கொள்கிறீரா?

**சாட்சி:** அதில் கையெழுத்திட்டபடியால் அதோடு ஒத்துப் போகிறேன் என்பது உண்மைதான். ஆனால் நான் அறிக்கையாளன் என்ற முறையில்தான் நடந்துகொண்டேன். நான் வரைந்திருந்தால் இதேமாதிரித்தான் வரைந்திருப்பேன் என்று சொல்ல முடியாது.

**திரு. வயலன்கோட்:**

**கேள்வி:** மெத்தச்சரி, இருந்தும் அதில் கையொப்பம் இட்டுள்ளீர்?

**நீதியரசர்:** அதில் கையெழுத்துப் போட்டு அதோடு ஒத்துப்போயுள்ளார்.

**திரு. வயலன்கோட்:** மெத்தச்சரி, சுருக்கமாக இந்த நீதிமன்றத்தின் கவனத்துக்கு நான் பிரகடனத்தின் பந்தி 3யை கொண்டுவர விரும்புகின்றேன். இந்தப்பந்தி, நாம் விளங்கிக்கொள்வது என்னவென்றால் என்பதிலிருந்து ஆரம்பிக்கிறது.

**நீதியரசர்:** பக்கம் 104 இல்?

**திரு. வயலன்கோட்:** பக்கம் 104, இப்படிச் சொல்கிறது நாம் விளங்கிக்கொள்ளவது என்னவென்றால், பயங்கரவாதத்தின் குறிப்பிட்ட குணாம்சம் பயமாகும். அதாவது எங்குமுள்ள பொதுமக்களுக்கு எதிராக கண்மூடித்தனமானதும் பயமூட்டுவதுமான திகிலை ஏற்படுத்துகிறது.......

இதில் கையொப்பம் இட்டுள்ளீர்?

**நீதியரசர்:** அதில் கையொப்பம் இட்டுள்ளதாக ஏற்கெனவே அவர் கூறிவிட்டார்?

**சாட்சி:** அந்த வரைவு பேராசிரியர் Falk அவர்களால் செய்யப்பட்டது. அதனைக் குழுவின் உறுப்பினர்கள் பயங்கரவாதத்தின் விளைவுகள் பற்றிப் போதிய விளக்கமென ஒத்துக்கொண்டார்கள்.

**திரு. வயலன்கோட்:** நீதியரசர் அவர்களே, வேறு கேள்விகள் இல்லையெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி. யக்மனின் மீள்விசாரணையின் தொடர்ச்சி:**

**கேள்வி:** பேராசிரியர் பொயில் அவர்களே, இந்த ஆவண வாயிலாக என்னென்ன செயல்கள் நீங்கள் அல்லது அந்த 100 நிபுணர்கள் கலந்து கொண்ட மாநாடு அரச பயங்கரவாதம் என்று எண்ணியதோ அவற்றை வரிசைப் படுத்தியுள்ளீர்கள்.

**பதில்:** என்னைப் பொறுத்தமட்டில், உங்களுக்குத் தெரியும், அரச பயங்கரவாதத்தைப் பற்றிய விவாதத்துக்கு நீண்ட நேரம் செலவழிப்பதில் பயன் இருப்பதாக நான் சொல்லமாட்டேன். ஆனால் அந்த மாநாடு எண்ணியது, நீங்கள் ஒரு வழக்கறிஞர் உங்களுக்குத் தெரிய வேண்டும், நாங்கள் ஒரு ஆவணத்தை அல்லது மரபை அல்லது ஒப்பந்தத்தை வரைகிறோம் என்று வைத்துக் கொண்டால், நான் முன்பு சொன்னமாதிரி கனேடிய இராணுவம் அல்லது அமெரிக்க இராணுவம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஆனால் அந்த மாநாடு மக்களுக்கு எதிரான பெரும்பாலான பயங்கரவாதச் செயல்களை, அது என்னவாக இருந்தாலும், அரசுகளே

தொடர்ச்சி 4 ம் பக்கம்....

www.tamilarangam.net



# இராணுவச் சாவடிச் சோதனைத் தாமதத்தால் ஆறு நோயாளிகள் துடிதுடித்து மரணம்

## - இடம்பெயர்ந்தோரின் மருத்துவத் தேவைகளை யோன் டானியல் அடிகள் விளக்குகிறார்

"......காடுகளைத் திருத்தி களிமண்ணையும் குச்சுக ளையும்கொண்டு வீடுகள் அமைத்து பொலித்தீன் பைக ளைக் கூரைகளாகப் போட்டு வாழும் மக்களாக இடம் பெயர்ந்த மக்கள் வாழுகின் றார்கள். இவைகள் பருவகால மாற்றங்களுக்கு இடங்கொடுக்க இயக்கமற்றவை. குறிப்பிடத்தக்க அளவு இடம்பெயர்ந்தோர் இவைகள் கூட, இன்றி சுகாதார வசதிகள் அற்றவர்களாய் திறந்த வெளியில் வாழ்கின்றனர். இதனால், இவர்களை நோய்கள் இலகு வாகத் தாக்குகின்றன. பெரும் பாலான கிணறுகள் வற்றிய நிலையில் காணப்படு கிறது. இந்த வரட்சி போதாதென்று பல்வேறு வகை யான உணவுத் தடைகளும் கட்டுப்பாடுகளும் கடுமையான உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தி மக்களை ஊட்டச் சத்தற்ற சமுதாயமாக மாற்றி வருகிறது.

முல்லை மாவட்டத்தில் மருத் துவ வசதிகளை அளிப்பத ற்காக யேசு சபைத் துறவிகளின் சிறிய உள்ளூர் வைத்தியசாலை ஒன்றை அமைத்தோம். இதில் 28 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், சராசரியாக 178 நோயாளிகளுக்கு தினசரி மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை. இதனால், கட்டில்களுக்குக் கீழும் விறாந்தைகளிலும், மரங்களுக்குக் கீழும் நோயாளிகள் தங்கி இருக்க வேண்டிய அவல நிலை சாதா ரணமாகக் காணப்படுகின்றது.

நீண்ட தூரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளை அனுப்பி வைப்பதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லை. நோயாளிகள் இராணுவச் சோதனைச் சாவடி களைத் தாண்டி வேறு வைத்தியசாலைகளுக்குப் போகும்போது, வீணான கால தாமதங்கள் ஏற்படுத் தப்படு கின்றன. கடந்த வருட இறுதிவரை ஆறு நோயாளிகள் இந்த இராணுவச் சாவடிச் சோதனைக் காலதாமதத்தினால், அநியாயமாக உயிர் இழந்து ள்ளார்கள்.

இப்படியான நிலைமைகளிலும், மாங்குளத்தில் யேசு சபைத் துறவிகள் இரணைப்பாலை, வவுனிக்குளம் பகுதிகளில் பராமரிப்பு நிலையங்களை அமைத்து 450 குடும்பங்களைப் பராமரித்து வருகின்றனர். அங்கு நாம் முன்பே தயாரிக்கப்பட்ட திட்டங்களுடன் மக்களை பராமரிக்க முயன்றோம். ஆனால் மக்கள், எப்படி வேறு வழிகளில் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதைக் கற்பித்த பொழுது பெருமையும் வியப்பும் அடைந்தோம். நாம் குடியிருப்பு களைப் போடவே முனைந்தோம். மக்களோ தமது முயற்சிகளால் அவற்றைத் தனித்தனி வீடுக ளாகவே மாற்றி ஒரு கிராமத்தையே பிறப்பித்துக் காட்டினர்.

இடம்பெயர்ந்த மக்களை அங்கே ஏற்கனவே குடியிருந்த மக்கள் வரவேற்ற விதம் பாராட்டுக் குரியது. இடம்பெயர்ந்துவந்த தங்கள் சகோதர சகோதரிகளுக்கு தங்கள் வளவுகளுள் வீடுகள் அமைக்க உதவியதும் அல்லாமல் தங்களது கிணறு களைப் பயன்படுத்துமாறும் கொடுத்தனர். தங்களது சொந்தத் தேவைக்காக வைத்திருந்த தேங்காய் போன்ற உணவுப் பொருட்களை பகிர்ந்தளித்து மகிழ்ந்தனர்.

ஆயினும், இந்தப் பகுதிகளில் வாழும் 30,000 மக்கள் சாவுடன் போராடுகின்றனர்.

ஆயினும், மக்கள் தமது தன்னலமற்ற சேவைகளின் மூலம் நம்பிக்கையுடன் வாழ்வுக் காகப் போராடிக்கொண்டு இருக்கின்றனர். உதாரணமாக பீற்றர் என்னும் ஒரு மீனவர், முன்பு நன்றாக தொழில் செய்தவர் – எங்களுடன் இருக்கின்றார். அவர் தமது 20 சக மீனவர்களுடன் மீன் பிடித்து மக்களுக்கு உண வளிக்க முயல்கிறார். இவ்வாறு, ஆர்வமுடன் பிறருக்காக உழைக்க முற்படும் மக்க ளுக்கும் வலைகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன வழங் கப்பட வேண்டிய தேவை உண்டு.

இவ்வாறு மருத்துவ வசதிகள் போதிய அளவு இல்லாத நிலையில் மக்கள் துடிக் கின்றனர். உதாரணமாக, பிரின் யோன் எனும் 16 வயதுப் பையன் நத்தார் விடுமுறையை எதிர்பார்த்து இருந்தான். ஒருநாள் அவனுக்குத் தலையிடி என்றான். மாலை தலையிடியால் துடித்தான். மறுநாள் காய்ச்சலும் ஆரம்பமானது. 'பனடோல்' மட்டுமே சிகிச்சை அளிப்பதற்கு இருந்தது. அன்றிரவு வயிற் றோட்டமும் சேர்ந்துகொண்டது. மறுநாள் வாந்தியும் எடுக்கத் தொடங்கினான். இரண்டு மைல் தூரத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி னோம். புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 60 கட்டில்கள் மட்டுமே உண்டு. ஆனால், சராசரி 300 பேருக்கு தினமும் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை. வைத்திய சாலையில் எல்லா விறாந்தை களும் – மலசலகூடத்திற்கு அருகில் இருந்த விறாந்தைகள் கூட– நோயாளிகளால் நிரம்பி வழிகிறது. ஒரேஒரு அரசாங்க வைத்தியசாலை மட்டுந்தான் இந்தப் பிரதேசத்தில் உண்டு.



மருத்துவர்களுக்கு நோயா ளிகளைப் பரிசோதிப்பதற்குப் போதிய நேர அவகாசமின்றித் தவிக்கின்றனர். காய்ச்சல் என்றால், மலேரியாக்குரிய மருந்து கையிருப்பில் இருப்பின், அதையே முதலில் கொடுக்கின்றனர். பிரின் யோன் என்ற இந்த சிறுவனையும் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் மூன்று தினங்கள் வைத்திருந்த பின் குண மடைந்து விட்டதாக வீட்டுக்கு அனுப்பினர். ஆயினும், மறு படியும் கடும் காய்ச்சல் தோன்றியதை அடுத்து 35 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஒலுமடு வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளின் முன் பக்கத்தில் இருத்தி எடுத்துச் சென்றோம். எறிகணைகளாலும் குண்டுகளாலும் குழியும் குண்டுமாகக் கிடந்த வீதியில் இரண்டு மணி நேரம் பயணம் செய்தோம். ஒலுமடுவில் பிரின் யோனை பரிசோதித்த முடிவைப் பெற ஆறு மணி நேரம் காத்தி ருந்தோம். நெருப்புக்காய்ச்சலும்

மலேரியாவும் ஒருங்கே ஏற்பட்டிருந்தது. பெரின் யோன் இரண்டு கிழமை ஒலுமடு வைத்தியசாலையில் இருந்து, வீடு திரும்பினான். மீளவும் தை 11ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இவ்வாறு அந்த சின்னஞ்சிறு வயதுப் பையன் துடிக்கிறான்.

பிரின் யோனைப் போன்ற ஆயிரம் ஆயிரம் மக்கள் நோய்களால் துடிக்கின்றனர். அவர்களுக்கு வைத்தியம் செய்ய மருந்து இல்லை. நோயாளி ஒருவர் வந்து நாற்பது செக்கனுக்குள் அவருக்கு வைத்தியம் அளிக்கும் அளவு க்கு வைத்தியர்கள் அளப்பரிய சேவைகள் செய்கின்றனர். இருந் தும் கொடுப்பதற்கு மருந்து இல்லை நோய்களைத் தடுக்க தடுப்பு ஊசிகள் இல்லை."

இவ்வாறு யேசு சபை அகதிகள் சேவையைச் சேர்ந்த அருட்திரு யோன் டானியல் அடிகள் 'Servir' என்ற சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.


# ஐ.நா.வை நோக்கி அமைதிப் பேரணி

**11 - 08-97 திங்கள் பிற்பகல் 2.00 மணி**

**(ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபை வரை)**

போக்குவரத்து வசதிகளுக்கு உங்கள் பகுதிக்குரிய விடுதலைப் புலிகளின் பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)



# மதுரகானங்கள் – 97

**09 - 08 -97 சனிக்கிழமைமாலை 6.30 மணி**

**Westminster Central Hall Storey's Gate Westminster.**

Rainbow வின் பின்னணி இசையில் தென்னிந்தியப் பாடகர்கள் உட்பட பிரான்ஸ், இலண்டன் வாழ் தமிழீழ முன்னணிப் பாடகர்கள் இணைந்து வழங்கும் இசை நிகழ்ச்சி


# மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி 1997

கடந்த 19-07-97 சனிக்கிழமையன்று தமிழ் மாணவர் அமைப்பினர் வருடா வருடம் நடாத்தி வரும் யேர்மனி தழுவிய மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டியின், 1997ம் ஆண்டிற்கான போட்டிகளை நடாத்தினர். டோட்மன் நகரில் றொட்டஎர்ட (சிவந்தமண்) மை தானத்தில் தேசியக்கொடி ஏற்றலுடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்ப மாகின. ஏறுது கொடி ஏறுது பார்— என்ற கொடி வணக்கம் இசைக்கத், தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் யேர்மனிப் பிரதிநிதி சிவநேசன் அவர்கள் ஏற்றி வைத்தார். யேர்மனித் தேசியக் கொடியை உலகத் தமிழர் இயக்க செயலாளர் சோமஸ்கந்தன் அவர்களும் உலகத் தமிழர் இயக்கக் கொடியை கல்விப்பணிப் பொறுப்பாளர் நாக லிங்கம் அவர்களும் தமிழ் மாணவர் அமைப்பின் கொடியை செயலாளர் குமணன் அவர்களும் ஏற்றி வைத்தனர். மங்கள விளக்கை, வண்ணனும், குமணனும் ஏற்றி வைத்தனர்.

யேர்மனியின் அனைத்துப் பாகங்க ளிலும் உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பணியினால் தமிழாலயம் எனப் பெயரிட்டு நடாத்தப்படும் 100 தமிழ் பாடசாலைகளிலிருந்தும், வெளி வாரியாகவும் விளையாட்டு வீரர்கள் கோரப்பட்டு நடாத்தப்பட்ட மாபெரும் விளையாட்டுப் போட்டியாக இது அமைந்தது. முன்னரே மாநில வாரியாகப் போட்டிகள் நடாத்தப்பட்டு தெரிவான போட்டியாளர்களுக் கிடை யிலான இறுதிப் போட்டியாக இது நடந்தேறியது. கொடியேற்றம் ஆரம்ப மானபோது தமிழீழத்தில் நின்றது போல் ஒரு எண்ணம் அனை வரையும் ஆட்கொண்டது. அணிவகு ப்பின் போது நேர்த்தியான ஒழுங்குத் தன்மை பளிச்சிட்டது. அனைத்துப் போட்டிகளின் போதும் தமிழால யங்களின் ஆசிரியர்களும் நிர்வா கிகளும் மாணவரும் பெற்றோரும் என் ஆர்வத்துடன் . பங்குகொண்டு சுறுசுறுப்பான ஒரு சூழலை உண்டு பண்ணினர்.

அனைத்துப் போட்டிகளிலும் நம்பிக்கையூட்டும் சாதனைகளை மாணவர்கள் பெற்றிருந்தனர். எதிர்கா லத்தில் நமது குழந்தைகளின் விளையாட்டுத்துறை முன்மாதிரியாக அமையுமென பெற்றோர் பேசிக் கொண்டனர்.

உதைபந்தாட்டப் போட்டிகள் ஏற்கனவே அனைத்து மாநிலங்க ளிலும் நடாத்தப்பட்டு இறுதிப் போட்டி இங்கு நடாத்தப்பட்டது. தமிழாலய மாணவர்களுக்கிடையிலான இறுதிப் போட்டி அனைவரையும் ஆச்ச ரியத்தில் ஆழ்த்தியது. சிறுவர்கள் சிறப்பாக ஆடி வியக்க வைத்தனர். கழகங்களுக்கிடையிலான போட்டி, இறுக்கமான போட்டியாக அமைந்தது. பரிசளிப்புக்கள் அனைத்தும் மகிழ்ச்சிப் பெருக்கோடு கை தட்டி ஆரவாரிக்க ஒற்றுமையின் வெளிப்பாடாக நடைபெற்றன.

தமிழீழத் தேசியக்கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள் இறக்கி வைத்தார். யேர்மனியத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மாநிலச் செயற்பாட்டாளர் சிறீரவி அவர்களும், உலகத்தமிழர் இயக்கக் கொடியை தமிழ் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ராஜசுந்தரம் அவர்களும், தமிழ் மாணவர் அமைப்பின் கொடியை உலகத்தமிழர் இயக்க கல்விப்பணிப் பொறுப்பாளர் நாகலிங்கம் அவர்களும் இறக்கி வைத்தனர். நேர்த்தியான, சுறுசுறுப்பான, தேவையான, அவசியமான, ஒற்று மையான – மாவீரரை புனிதப்படுத்தும் விளையாட்டுப் போட்டியாக இது நடந்தேறியது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 83 யூலை இனப்படுகொலை நினைவாக

ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுதுதான், அது மக்கள் போராட்டமாக - தேசியப் போராட்டமாக முழுமையும் முதிர்ச்சியும் பெறுகின்றது. அப்பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகின்றது.

*- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்*

**வி**டுதலைப் போராட்டத்தில் 'மக்களின் எழுச்சி' எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையே தேசியத் தலைவர் அவர்கள் எடுத்தியம்பியுள்ளார். தலைவர் அவர்கள் தமிழீழத்தில் வாழும் மக்களை நோக்கி மட்டும் இக் கருத்தை வெளிப்படுத்தியதாகக் கொள்ளலாகாது. இன்று, உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் நமது புலம்பெயர் தமிழர் ஒவ்வொருவருக்கும் தமிழீழ விடுதலைக்கு தம்மால் முடிந்த சகல வழிகளிலும் உதவ வேண்டிய தார்மீகக் கடமை உண்டு. நாம் நமது தேசியக் கடமையைச் செய்வ



தினாலேயே தமிழீழ விடுதலையை விரைவுபடுத்த முடியும்.

இந்த வகையில், லண்டனில் யூலை மாதம் 26ஆம் நாள் நடைபெற்ற தமிழ் மக்களின் ஊர்வலத்தை ஓர் அங்கமாக நோக்கலாம்.

1983 ஆம் ஆண்டின் யூலை மாதம் ஈழத் தமிழர்களால் மறக்க முடியாதது. அன்றும் இன்றும் இம் மாதம் பல மறக்க முடியாத நிகழ்வுகளை வரலாற்றில் பதித்துக் கொண்டுள்ளது. சிங்கள இனவெறி அரசின் ஆதரவுடன் 1983 யூலை மாதத்தில் தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர் - ஆயிரக்கணக்கில் அகதிகளாக்கப்பட்டனர். அரச ஆதரவுடன் இன்னமும் தமிழ் இனஅழிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. 83ஆம் ஆண்டுப் படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவாகவும், தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ் இனஅழிப்பை சர்வதேச உலகுக்கு வெளிப்படுத்தும் முகமாகவும், தமிழ் மக்கள் லண்டன் மாநாகரின் பிரதான வீதிகளினூடாக - தாயகத்தில் நடைபெறும் அவலங்களை வெளிப்படுத்திச் சென்றனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் லண்டன் - ரெம்பிள் பிளேஸ் (Temple Place) எனும் இடத்தில் - பெரும்பாலும் லண்டனின் பல பாகங்களிலும் வாழும் தமிழ் மக்கள் கூடத் தொடங்கியிருந்தனர். கோடை காலமாக இருப்பினும், திடீரென மாறிய காலநிலையாக மழையும் பெரிதாக பெய்யத் தொடங்கியது. இது ஊர்வலத்திற்கு ஓர் இடைஞ்சலான காலநிலைதான். ஆனால், தாயகத்தை நினைத்துப் பார்க்கையில், இவைகள் எல்லாம் ஓர் பொருட்டான விடயம் அல்லவே. தமிழீழத்தில், சிறிலங்கா அரசின் 'சமாதானத்துக்கான போரால்' அகதிகளாக்கப்பட்ட மக்களின் நாளாந்த வாழ்க்கையே மரநிழல்களின் கீழ் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அம் மக்களின் அவலங்களை வெளிப்படுத்த, இம் மழையை ஓர் இடையூறாக நினைக்க முடியுமா?

ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் சரியாக பிற்பகல் இரண்டு மணியளவில் நகரத் தொடங்கினர். தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், யுவதிகள் என பலரும் மழையில் நனைந்து கொண்டே, "தமிழீழம் எங்கள் தாயகம்", "விடுதலைப் புலிகள் - விடுதலைப் போராளிகள்", "எங்கள் தலைவர் - பிரபாகரன்", "சிறிலங்காவிற்கான உதவியை




நிறுத்து", "சிங்களப் படையே! தமிழீழத்தை விட்டு வெளியேறு", "சிறிலங்கா ஜனாதிபதி ஓர் கொலையாளி" போன்ற சுலோகங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் உரத்துக் கூறிச் சென்றமை அவர்களது மன உணர்வுகளை பெரிதும் வெளிப்படுத்தின.

லண்டனில் பிரபலமான பல வீதிகளுக்கூடாகவும் சென்ற இவ் ஊர்வலத்தை, வீதியால் சென்றவர்களும், விடுதிகளில் நின்றவர்களும் வியாபாரத் தலங்களில் நின்றவர்களும் உன்னிப்பாகக் கவனித்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. நீண்ட ஒரு தூரத்தைக் கடந்து சென்ற இவ் ஊர்வலம் 3.30 மணியளவில் கைட் பார்க் கோணர் (Hyde Park Corner) எனும் இடத்திற்கு வந்தடைந்தது. அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் ஐந்து பிரமுகர்கள் உரையாற்றினர்.

அவர்களை, தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு தொடர்ந்தும் குரல் கொடுத்துவரும் பிரித்தானிய ஆங்கிலப் பெண்மணி டியற்றி மக்கொனால் - (Deirdre McConnel) அறிமுகம் செய்து வைத்தார்.

"வெளிநாட்டுச் செய்தித் தொடர்புச் சாதனங்களின் தடையுடன் தமிழர்கள் மீதான போர் சிறிலங்கா அரசால் நடாத்தப்படுகின்றது. இதனால் உண்மைச் செய்திகள் வெளிவருவது மந்த நிலையில் உள்ளது. இவ் உண்மைகளை தமிழர்களாகிய நீங்கள், தமிழரல்லாதாரிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுவதால் அவர்களிடம் உங்களது பிரச்சினைகளை புரியவைக்கலாம்."

**- ரேச்செல் ஜென்கின்ஸ்**

முதலில், பிரித்தானியாவில் உள்ள 'ஆயுத விற்பனைக்கெதிரான அமைப்பைச் சேர்ந்த கலாநிதி ரொனி கெம்ஸ்ரர் (Dr. Tony Kempster) அவர்கள் தமதுரையில், "இன்று உலகில் 45 குறிப்பிடக்கூடிய போர்கள் நடைபெறுகின்றன. இருப்பினும், இதில்



www.tamilarangam.net

# லண்டனில் ஊர்வலம்

தமிழர்களின் போராட்டம் ஓர் வித்தியாசமான இடத்தை வகிக்கின்றது. நாம் எப்பொழுதும்




உண்மைக்கு குரல் கொடுப்போம். அந்த வகையில், இலங்கையின் தமிழர் பகுதிகளில் நடைபெறும் கொடுமைகளை வெளிப்படுத்துவதில் நாமும் பங்கு கொள்வோம்" எனத் தெரிவித்தார்.

அடுத்ததாக, இங்கிலாந்தின் மான்செஸ்ரர் மாநிலத்தில் உள்ள லூதர் கிங் மறைக் கல்லூரியில் (Luther King Theological College) சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஆங்கிலப் பெண்மணி றேச்செல் ஜென்கின்ஸ் (Rachel Jenkins) தமதுரையில், "வெளிநாட்டுச் செய்தித் தொடர்புச் சாதனங்களின் தடையுடன் தமிழர்கள் மீதான போர் சிறிலங்கா அரசால் நடாத்தப்படுகின்றது. இதனால் உண்மைச் செய்திகள் வெளிவருவது மந்த நிலையில் உள்ளது. இவ் உண்மைகளை தமிழர்களாகிய நீங்கள், தமிழரல்லாதாரிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுவதால் அவர்களிடம் உங்களது பிரச்சினைகளை புரியவைக்கலாம். அத்துடன் எவரொருவர் உங்கள் பிரச்சினைகளைக் கேட்கத் தயாராக இருக்கிறாரோ அவரிடம் உங்கள் தாயக மக்களின் அவலங்களை எடுத்துக் கூற தயங்கக் கூடாது" எனக் கூறினார். இவர் தனது கல்லூரியில் உள்ள அனைத்து விரிவுரையாளர்கள், மாணவர்களையும் ஒன்றுகூட்டி, கடந்த ஆண்டு இடம்பெற்ற தமிழர்களின் பாரிய இடப்பெயர்வுகளையும், அவர்கள் எதிர்கொள்ளும் அவலங்களையும் விளக்கமாக எடுத்துக்கூறி தமிழர்களின் பிரச்சினையை அவர்களுக்கு நன்றாகப் புரிய வைத்துள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து, சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த திரு. மார்க் ஏப்பிரகாம்ஸ் (Mr. Mark Abrahams) அவர்கள் தமதுரையில், "கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூடி தமிழர் பிரச்சினையை பிரித்தானியாவில் உள்ள அரச, அரச சார்பற்ற அமைப்புகளுக்கு எடுத்து விளக்கி வருகிறோம். இருப்பினும் நாம் ஆற்றும் செயற் திட்டங்கள் போதாது. இயன்றளவு இதனை அதிகரிக்க முயற்சி செய்கிறோம். நீங்கள் மனச்சோர்வின்றி தொடர்ந்தும் உங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தேசிய வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளுக்கும் தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரசினால் நடாத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை தெரியப்படுத்துங்கள். தொலைபேசி வாயிலாக அல்லது கடிதம் மூலமாகத் தொடர்ந்தும் இதனை ஒவ்வொருவரும் செய்யும்போது நிச்சயமாக இவ் உண்மைகள் வெளிவரவே செய்யும். நீங்கள் நினைப்பதுபோல் இத் தொடர்பு சாதனங்களை அணுகுவது மிகுந்த சிரமமல்ல. முழு நேரமாக இவற்றைச் செய்ய முடியாது. ஆகவே, ஒவ்வொருவரும் ஒரு கடிதம் மூலமேனும் தொடர்பு கொள்ளும்போது இறுதியில் அது ஒரு பெரிய பயனைத் தரும்" என ஒவ்வொரு தமிழர்களும் எவ்வாறு தமது விடுதலைக்கான பங்களிப்பை இலகுவாகச் செய்யலாம் என்பதனை விளக்கினார்.

அடுத்ததாக, குர்திஸ் தகவல் நிலையத்தைச் சேர்ந்த திரு.விவற்ஏபில் (Fivaterbil) அவர்கள் உரையாற்றுகையில், "தமிழீழ விடுதலைப் போராட்டம், எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் ஊக்கத்தை கொடுக்கிறது. நாம் பல ஆயிரம் மைல் தூரத்திற்கு அப்பால் இருப்பினும், தமிழீழத்தில் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்கிறோம். இவ் விடுதலைப் போருக்கு எமது ஆதரவுக் குரல் எப்போதும் உண்டு" எனத் தெரிவித்தார்.



இவரை அடுத்து, 'களத்தில்' பத்திரிகையின் ஆசிரியரும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் ஆய்வு செய்து கொண்டிருப்பவருமான திரு. பற்றிமாகரன் அவர்கள் தமிழில் உரையாற்றினார். அவர் தமதுரையில், "தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியில் தனது அனைத்து வளங்களையும் சிறிலங்கா அரசு பயன்படுத்துகிறது. இருப்பினும் சிங்களப் படைகள் தொடர்ந்தும் பலத்த இழப்புக்களை எதிர்கொண்டு வருகின்றது. தாயகத்தை மீட்கும் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள நமது தமிழ் இராணுவத்திற்கு தொடர்ந்தும் உங்கள் ஆதரவினை வழங்கி அவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். சிங்களப் படை அழிவுப் பாதையில் தான் செல்கிறது. இந்தச் சரியான தருணத்தில் நாம் எமது அன்றாடக் கடமைகளில் ஒன்றாக தாயக விடுதலைக்கு உதவி செய்வோம்" என்றார்.

இதனைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்கள் உரையாற்றினார். "யாழ். குடாநாட்டிற்கான பாதை திறப்பு என சிங்களப் படையினர் தொடங்கிய இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலால் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது யாழ். குடாநாட்டுக்கான தரை, கடல், வான் வழியிலான விநியோகப் பாதை விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டுள்ளது. இதனை நீடித்து சிங்களப் படையை பெரும் நெருக்கடிக்குள் தள்ளி அதன் முதுகெலும்பை உடைக்க வேண்டும். இவற்றை வெற்றிகரமாக நடாத்த புலம்பெயர் வாழ் தமிழர்களே பெரிதும் உதவ வேண்டும்" எனத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த வேண்டுகோளை அங்கு கூடியிருந்த மக்கள் முன் வெளிப்படுத்தினார்.

இறுதியாக, தமிழர் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த செல்வி மான் அவர்கள் தமிழிலும், செல்வி மதுரா இராசநாயகம் அவர்கள் ஆங்கிலத்திலும் உரையாற்றினர். அவர்கள் தங்கள் உரையில், "தமிழர் மனித உரிமைகள் மையம், தமிழீழத்தில் சிறிலங்கா அரச படைகளினால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதில் தீவிரமாக இயங்கி வருகின்றது. இருப்பினும் அதன் செயற்பாட்டாளர்கள் பற்றாக்குறை காரணமாக, அதிகரித்துச் செல்லும் வேலைத்திட்டங்களை உடனுக்குடன் செயற்படுத்துவதில் தாமதமாகின்றது. முக்கியமான இக்காலகட்டத்தில், இவ் மனித உரிமை மீறல்களை வெளியுலகிற்கு வெளிப்படுத்த வேண்டியது எம் அனைவரினதும் கடமை. ஆகவே, வாரத்தில் ஒருநாளில் ஒரு மணி நேரமாவது உங்கள் நேரத்தை இதற்கு வழங்கினால் இவ் வேலைகளை மேலும் விரிவுபடுத்தலாம்" எனத் தெரிவித்தனர்.

இவ் உரைகளைச் செவிமடுத்த மக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு தமது பங்கு எவ்வளவு முக்கியத்துவம் என்பதை உணர்ந்தவர்களாகத் திரும்பினர். ✷

**தொகுத்தளிப்பு - மோகன்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்கள் தனது உரையில் "யாழ. குடாநாட்டிற்கான பாதை திறப்பு என சிங்களப் படையினர் தொடங்கிய இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலால் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது யாழ். குடாநாட்டுக்கான தரை, கடல், வான் வழியிலான விநியோகப் பாதை விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டுள்ளது. இதனை நீடித்து சிங்களப் படையை பெரும் நெருக்கடிக்குள் தள்ளி அதன் முதுகெலும்பை உடைக்க வேண்டும். இவற்றை வெற்றிகரமாக நடாத்த புலம்பெயர் வாழ் தமிழர்களே பெரிதும் உதவ வேண்டும்"" எனத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த வேண்டுகோளை அங்கு கூடியிருந்த மக்கள் முன் வெளிப்படுத்தினார்.

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினைந்து

(தொடர்ச்சி)

மீளவும் கரேன் தன் வேதாகமப் புத்தகத்துக்குத் திரும்பினாள். இப்போது அதை வாசிக்கும் போது அவற்றில் புதுவகையான விளக்கமும், தெளிவும் இருப்பது போல் தோன்றியது. அவள் பல மணி நேரத்துக்குத் தீர்க்கதரிசி இசையாசின்,

"நாங்கள் குருடர்களைப் போல் சுவரைத் தேடுகின்றோம். இரவில் தடுமாறுவது போல் நண்பகலில் தடுமாறுகிறோம். நாங்கள் பாவனையில்லாத இடங்களில் இறந்த மனிதர்களைப் போல் இருந்தோம். நாங்கள் கரடிகளைப்போல் உறுமுகிறோம். ஆனால் புறாக்களைப் போல் அழுது புலம்புகிறோம். நாங்கள் இரட்சணியத்தைத் தேடுகிறோம். ஆனால் அது எங்களிலிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது." போன்ற புலம்பல்களைப் பற்றிச் சிந்திப்பாள்.

இந்த வசனங்கள் லாசியோடாட்டின் நிலைமைக்குச் சரியாகப் பொருந்துகிறது என அவள் எண்ணினாள். அவளுடைய வேதாகமத்தில் நிறைந்திருந்த அடிமைத் தனம் விடுதலை பெறல் அடங்கிய கதைகளைத் தன்னுடையதும், தன்னுடைய குடும்பத்தினதும் நிகழ்வுகளோடு ஒத்துப் பார்த்துக் கொண்டாள்.

"நாடுகளின் பார்வையில் எவ்வளவு இகழ்ச்சிக்குரிய, பரிகாசத்திற்குரியவர்களாக ஆகியிருக்கின்றோம். செம்மறி ஆடுகளைப் போல் கொல்லப் படுவதற்காகவும், தண்டிக்கப்படுவதற்காகவும், நிந்திக்கப்படுவதற்காகவும், கூட்டிச் செல்லப்படுகிறோம். ஆயினும், இவற்றுக்குள்ளாலும் உம்முடைய பெயரை நாங்கள் மறக்கவில்லை. எங்களை மறந்து விடவேண்டாம் என்று உம்மைக் கெஞ்சுகிறோம்."

**லியோன் யூரிஸ்**

ஆயினும், மறுபடியும் குழப்பமே மிஞ்சியது. அப்படியாயின் ஏன் கடவுள் தன் மக்களிலேயே அறுபது இலட்சம் பேர் கொல்லப்பட விட்டார்? வாழ்க்கையின் அனுபவங்களே தனக்கு இக்கேள்விகளுக்கான பதிலை ஒரு நாளைக்குத் தரமுடியும் எனக் கரேன் முடிவெடுத்துக் கொண்டாள்.

லாசியோடாட்டில் இருந்தவர்கள், ஐரோப்பாவை விட்டுப் பலஸ்தீனத்துக்குள் போய்விட வேண்டும் என்ற தாங்க முடியாத ஆவலுடன் இருந்தனர். அவர்கள் ஒரு குழப்பம் செய்யும் கூட்டமாக மாறாமல் தடுத்துக் கொண்டிருந்த ஒரேசக்தி, பலஸ்தீனிய பால்மாக்கின் பிரசன்னம்தான்.

மொசாட் அலியா பெற்றுக்கும், பிரிட்டிஷாருக்கும் இடையே, தங்களைப் பற்றி நடைபெற்று வந்த "சதியா லோசனைக்கிடையேயான யுத்தத்தைப் பற்றி அந்த மக்கள் அதிகம் கவலைப்படவில்லை. பிரிட்டிஷார் மத்திய கிழக்கிலும், எண்ணெய்க் கால்வாய்கள், அரபுக்களுடனான தங்கள் பாரம்பரிய ஒத்துழைப்பு ஆகியவற்றில் தங்களுக்கிருந்த பிடிப்பைத் தொடர்ந்து பேணுவதில் எடுத்த அதீத முயற்சிகளைப் பற்றியும் கவலைப்படவில்லை. ஒரு குறுகிய காலமொன்றுக்கு ஒரு வருடத்துக்கு முன்பாக, பலஸ்தீனத்தில் திறந்த குடியேற்றத்துடன் கூடிய ஒரு மாதிரி நிர்வாகம் கைமாறுவதற்கு வாக்கெடுப்புமூலம் மக்கள் ஆணையைப் பெறும் (model mandate) உறுதிமொழியுடன், தொழிற்கட்சி (labour party) ஆட்சிக்கு வந்ததும், எல்லோருக்கும் நம்பிக்கை ஒளி பிறந்தது. பலஸ்தீனத்தை ஒரு பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகள் சபையின் (commonwealth) அங்கத்தவர் ஆக்குவது குறித்த கதையும் மீள எழுந்தது.

> தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூத மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிராத்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

அராபிய நிலங்களின் கீழ் நுரைத்துக் கொண்டிருந்த "கறுப்புத் தங்கத்தின்" (black gold - எண்ணெய்) குரலுக்கு செவிமடுக்கத் தொடங்கியதும், இந்த நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டன. பலஸ்தீனத்தைப் பற்றிய முடிவு எடுத்தல், கடந்த இருபத்தைந்து வருடங்களைப் போலவே மேலதிக ஆய்வுகள், ஆணைக்குழுக்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றுக்காகப் பின் போடப்பட்டது.

ஆயினும் எந்தக் காரணமுமே லாசியோடாட்டில் இருந்த யூதர்களின், பலஸ்தீனம் போவதற்கான ஆவலை மட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. மொசாட் அலியா பெற்றின் முகவர்கள் ஐரோப்பா முழுவதுமே சென்று தப்பிப் பிழைத்திருந்த யூதர்களை, சினேக பூர்வமான நாடுகளின் எல்லைகளூடாக வன்செயல் எதுவுமின்றி லஞ்சம், ஆவணங்கள் திருடுதல் மற்றும் வழிகளால் வழிநடத்தி வந்தார்கள்.

இந்நிகழ்வுகளின் தாளங்கள் நாட்டுக்கு நாடு மாறியபோது பெரும் கண்ணாமூச்சி விளையாட்டுக்கள் இடம் பெற்றன. ஆரம்பத்திலிருந்தே பிரான்சும், இத்தாலியும் மொசாட்டுடனான பகிரங்க ஒத்துழைப்புடன் அகதிகள் பக்கசார்பாகச் செயற்பட்டன. அந்நாடுகள் அகதிகளை வரவேற்கத் தங்கள் எல்லைகளையும் திறந்துவிட்டு முகாம்களையும் அமைத்துக் கொடுத்தன. இத்தாலி, பிரிட்டிஷ் ப்டைகள் நிலைகொண்டிருந்த காரணத்தால், இக்கட்டுக்குள்ளானதால் பிரான்சே முக்கிய அகதிகள் மத்தியஸ்தானமாயிற்று.

விரைவில, லாசியோடாட் போன்ற இடங்கள் நிரம்பி வழியத் தொடங்கின. இதற்குப் பரிகாரமாக மொசாட் சட்டவிரோதக் குடிபெயர்தலை ஊக்கப் படுத்தியது. ஐரோப்பாவின் கடற் துறைமுகங்கள் எல்லாம் மொசாட் முகவர்களின் கவனத்துக்குட்பட்டு, அமெரிக்க யூதர்களால் அவர்களுக்கு அனுப்பப்பட்ட பணத்தைக் கொண்டு படகுகளை வாங்கிச் சீரமைத்து, பிரிட்டிஷ் தடையை மீறிப் பலஸ்தீனத்துக்குள் அகதிகளைக் கொண்டு சென்றனர். பிரிட்டிஷார் தங்கள் கடற்படையை மட்டுமல்லாது, மொசாட்டுக்கு எதிரான எதிர் உளவு வேலைகளிற் தங்கள் தூதரகங்களையும் பிரதிநிதிக் காரியாலயங்களையும் (consulate) பாவித்தனர்.

கடல் நீர் உள்ளே ஒழுகிக் கொண்டிருக்கும் மொசாட் அலியா படகுகளில் நிறைந்து வழிந்தபடி பலஸ்தீனத்துக்குச் சென்ற திக்கற்ற அகதிகள், மூன்று மைல் பிராந்தியத்துக்குள் சென்றதுமே பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டனர். இந்த அகதிகள் திரும்பவும் ஒரு முகாமிலேயே தடுத்து வைக்கப்படுவர். இந்த முகாம் பலஸ்தீனத்தில் அட்லிட்டி (atlit)ல் இருந்தது.

தந்தை உயிரோடிருப்பதை அறிந்து கொண்ட கரேன், தானும் பலஸ்தீனத்திற்குப் போகவேண்டும் என்னும் ஆவலினால் பீடிக்கப்பட்டாள்.தந்தையார் பலஸ்தீனத்துக்கு வருவார் என இயற்கையாகவே அவள் எதிர்பார்த்தாள்.

அவள் பதினைந்தே வயதாக இருந்தாலும், பால்மாக் குழுவில் இணைக்கப்பட்டாள். பால்மாக்கின் அங்கத்தவர்கள் இரவில் பாசறைத் தீயைச் சுற்றி அமர்ந்து பாலும் தேனும் வழிந்தோடும் தங்கள் நாட்டைப் பற்றிய கதைகளைச் சொல்லுவதிலும் பைபிளிலிருந்து பாரம்பரியமான பாடல்களைப் பாடுவதிலும் ஈடுபட்டனர். அவர்கள் முழு இரவும் கதைகள் சொல்லிக் கொள்வர். சிலவேளைகளில் கரேன் நடனமாடு......... நடனமாடு என்று குரலெழுப்புவர்.

அவள் 100 குழந்தைகள் கொண்ட ஒரு குழுத்தலைவியாக நியமிக்கப்பட்டு, மொசாட் படகுகளில் தடையை மீறி, பலஸ்தீனத்துக்குக் கொண்டு சொல்லப்பட வேண்டிய நேரம்வரை அவர்களைத் தயாராக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டாள்.

பலஸ்தீனியர்கள் குடியேறலுக்கான அளவை பிரிட்டிஷார் மாதத்துக்கு 1500 என நிர்ணயித்து அதிலும் வயதானவர்களையும் போராட முடியாத குழந்தைகளையுமே அனுமதித்து வந்தனர். இளைஞர்கள் தாடி வளர்த்தும் மயிர்களுக்குச் சாயம் பூசியும் வயது சொன்றவர்கள் போல் தோற்றமளிக்க முயற்சித்தாலும், இப்படியான உத்திகள் பயனளிக்கவில்லை.

டென்மார்க்கிலிருந்து கரேன் வெளியேறிய ஒன்பதாவது மாதமாகிய 1946 சித்திரை மாதத்தில் ஓர் நாள் கலில் அந்த மகிழ்ச்சிச் செய்தியை அவளுக்கு அறிவித்தாள்.

"ஒரு அலியபெற் கப்பல் இன்னும் சில நாட்களில் வரப்போகிறது. நீயும் உன்னுடைய பகுதியும் அதில் செல்லப் போகிறீர்கள்." கரேனுடைய இதயம் மகிழ்ச்சியால் வெடித்து விடும் போலிருந்தது.

"கப்பலுடைய பெயர் என்ன?"

"ஸ்டார் ஒவ் டேவிட்" (Star Of David) என்றாள் கலில்.

### அத்தியாயம் பதினாறு

"கார்பார்த்தோஸ் (Karpathos) என்ற நீராவிக் கப்பல் பிரிட்டிஷ் புலனாய்வு அதிகாரிகளின் மிகக் கவனமான கண்காணிப்புக்குள்ளாயிற்று. சலோனிக்காவில் மொசாட் அலியா பெற்றினால் கார்பத்தோஸ் வாங்கப்பட்டதும் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. 800தொன் நிறையும் நாற்பத்தைந்து வயதுமான அந்தக் கப்பலின் நடமாட்டம் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. அது பைறியஸ் (Piraeus) என்ற ஏதென்ஸ் துறைமுகம் சென்றதும், அமெரிக்க மொசாட் அலியா பெற் மாலுமிகளினாற் பொறுப் பேற்கப்பட்டதும் இத்தாலியின் ஜெனோவா துறைமுகம் கொண்டு செல்லப்பட்டதும் அவதானிக்கப்பட்டது. அங்கு வைத்து ஒரு குடியகல்வுக் கப்பலாகச் சீரமைக் கப்பட்டதும் அவதானிக்கப்பட்டது. அக்கப்பல் சிங்கக் குடாவுக்கு (Gulf of Lions)_?



பிரான்சின் தென்கரை முழுவதுமே புலனாய்வு அதிகாரிகளால் நிறைந்திருந்தது. லாசியோடட்டைச் சுற்றிலும் ஏதாவது பெருந்தொகையில் இடமாற்றுதல் நடைபெறுகிறதா என்று 24 மணிநேரக் கண்காணிப்பு நடத்தப்பட்டது. பத்துப் பன்னிரெண்டு பெரிய சிறிய உத்தியோகத்தர்கட்கு இதற்காக லஞ்சமும் வழங்கப்பட்டது. வெண்மண்டபத்திலிருந்து கார்பாத்தோஸை பிரஞ்சுப் பிராந்தியக்கடலினுள் வரவிடாமல் தடுக்கும்படி பரிசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷார் கொடுத்த அழுத்தங்களோ அல்லது இலஞ்சங்களோ பயனற்றுப்போயின. அலியா பெற்றுடனான பிரெஞ்சு ஒத்துழைப்புத் திடமாக இருந்தது. கார்பார்தோஸ் 3 மையில் பிராந்தியத்தினுட் பிரவேசித்தது.

விழையாட்டின் அடுத்தகட்டம் ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷாரைக் குழப்பும் நோக்கில் ஐந்தாறு முறை லாசியோடாட்டிலிருந்து பாரீட்சார்த்த பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடரும்...

www.tamilarangam.net



# போரும் பொருண்மியமும்

## காற்றாடி இயந்திரம் (Wind Mill)

### காற்றுசக்தி

காற்றின் சக்தியானது கடந்த பல நூற்றாண்டுகளாக மனிதனால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை உபயோகித்து செலுத்தப்படும் பாய்மரக் கப்பல்கள் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கவும் எதிரி நாடுகள் மீது படையெடுக்கவும் எமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. தவிர தானியங்கள் அரைக்கும் பெரும் ஆலைகளிலும் (mills) நீர் இறைப்பதிலும் காற்று சக்தி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது இன்னும் நவீன இயந்திரங்களான "காற்றாடி இயந்திரம்" (wind turbine) போன்ற வற்றை இயக்குவதில் பயன்படுத்தப்படுகிறது.

காற்றாடி இயந்திரங்கள் மலிவாகவும், பாதுகாப்பாகவும், சுற்றாடலை மாசுபடுத்தாமலும் மின்சாரத்தை உற்பத்திசெய்யவல்லன. இதற்கான எரிபொருள் அதாவது காற்று என்றென்றும் வற்றாது கிடைக்கக் கூடியது மட்டுமல்லாது, இலவச மாகவும் கிடைக்கின்றது. காற்றாடி இயந்திரங்கள் 1 மீற்றர் இலிருந்து 100 மீற்றர் வரை விட்டம் (diameter) உள்ள வெவ்வேறு அளவுகளில் அமைக்கப்படுகின்றன.

மிகச்சிறிய இயந்திரங்கள் 1 இலிருந்து 3 மீற்றர் வரை விட்டமுடையன. இவை மின்கலங்களில் மின்சாரத்தைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. அடுத்தகட்ட சாதாரண அளவுள்ள இயந்திரங்கள் (medium-sized wind turbines) 40 மீற்றர்வரை விட்டமுடையவை. இவ்வகை இயந்திரங்களிலிருந்து 500 கிலோ வாற்று (500 kilowatts) வரை மின்சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம். இவை விவசாயம், வைத்தியசாலைகள் போன்றவற்றிற்கு மின்சாரம் வளங்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

பெரிய காற்றாடி இயந்திரங்கள் 40 மீற்றரிலிருந்து 100 மீற்றர் வரை விட்டமுடையவை. இவை 4000 கிலோவாற்று (4MW) மின்சக்தியை உற்பத்தி செய்ய வல்லவை. பிரித்தானியாவில் ஒக்நி (Orkney) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள காற்றாடி இயந்திரம் 60 மீற்றர் விட்டமுடையது 3000 கிலோவாற்று மின்சக்தியை உற்பத்திசெய்ய வல்லது.



60 மீற்றர் விட்டமுடைய, 3000 கிலோவாற்று மின்சக்தியை உற்பத்தி செய்யவல்ல காற்றாடி இயந்திரம்


நீர் இறைக்கும் காற்றாலைகள் (wind mills) அமரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அனேகமான கிராமங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை இப்போது வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலும் பயன்படுத்தப்படக்கூடிய வகையில் உருவாக்கப்படுகின்றன.

உலகில் பல நாடுகள் மின் உற்பத்திக்கு இன்னும் டீசலையே எரிபொருளாகப் பயன்படுத்திவருகின்றன. இங்கே டீசல் இயந்திரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட காற்றாடி இயந்திரங்களைப் பாவிப்பதன்மூலம் பெருமளவு டீசலை மிச்சம்பிடிக்கமுடியும்.

காற்றாடி இயந்திரங்களால் உற்பத்திசெய்யப்படும் மின்சாரத்தின் விலையானது அதன் வகை, அமைக்கப்படும் இடம், காற்றின் வேகம் போன்றவற்றில் தங்கியுள்ளது. இருப்பினும் பிரித்தானியாவில் உற்பத்திசெய்யப்படும் காற்று மின்சாரத்தின் விலை பாரம்பரிய, கரியைப் பயன்படத்தி உற்பத்திசெய்யப்படும் மின்சாரத்தின் விலைக்கு ஒப்பானதாகும் எனவும் அணுமின்சாரத்தின் விலையிலும் அரைவாசியானதெனவும் பிரித்தானிய காற்று சக்திக் கழகத்தின் (British Wind Energy Association) வெளியீடான Factsheet No. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லாவகையான மின்னுற்பத்தி முறைகளும் சுற்றாடலைப் பாதிக்கவே செய்கின்றன. காற்றாடி இயந்திரங்கள் சுற்றாடலை மாசுபடுத்துவதில்லை - அமில மழைக்குக் காரணமாகவிராது, ...................... மின்னுற்பத்திக்குக் காற்றுச்சக்தியைப் பயன்படுத்துவதன்மூலம் பெறுமதிமிக்க எரிபொருள்களான கரி, எண்ணை, இயற்கைவாயு போன்றவற்றை சேமிக்கமுடியும்.

ஆனால் காற்றாடி இயந்திரங்கள் பெரும் சத்தத்தை உண்டு பண்ணுகின்றன. நவீன தொழில் நுட்பங்கள் மூலம் இச்சத்தத்தைக் குறைப்பதற்கான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.



இத்தாலியில் சாடினியா (Sardinia) என்ற இடத்தில் அமைக்கப் பட்டுள்ள ஒற்றைக் காற்றாடி (one-bladed turbine) 1600kWh மின்சாரத்தைத் தரக்கூடியது.

கலிபோனியாவில் உள்ள ஒரு காற்றாடித் தோட்டத்தில் (wind farm) மாடுகள் மேய்வதை அருகில் உள்ள படத்தில் பார்க்கிறீர்கள். காற்றுமின்சார உற்பத்திநிலையங்களிற்கு பெரும் நிலப்பரப்புகள் தேவைப்படுகின்றபோதும் அந்நிலம் வேறுபயன்பாடுகளிற்கும் அதேநேரத்தில் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதால் செலவு கட்டுப்படுத்தப்படும்.





## தளிர் மாலை 1997

தமிழ்ச் சிறார்களுக்கிடையே போட்டிகள்

பொது அறிவுப் போட்டி (General Knowledge)
பேச்சுப் போட்டி (Speech)
சித்திரப் போட்டி (Art)
மாதிரி அமைத்தல் (Model Making)
வினோத உடைப் போட்டி (Fancy Dress)
இவற்றுடன்
தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான கலை நிகழ்ச்சிப்போட்டிகள்

06 – 09 – .97 இல் உள்ளபடி போட்டிகளுக்கான வயதுப் பிரிவுகள்
Group A 5 வயதுக்கு உட்பட்டவர்கள்
Group B 5 – 7 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group C 7 – 9 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group D 9 – 12 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group E 12 – 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள்

**இடம்**
Camdon Town Hall
Judd Street
London WC1H 9JE

Nearest underground: Kingscross, Euston

**காலம்**
06 - 09 - 97
Saturday
5.00 pm - 10 pm

விண்ணப்ப முடிவுத் திகதி 31-7-97

விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
0181 365 0249
or
0171 403 4554
after 9.pm 0181 503 3503



தமிழீழ மண்ணின் வளங்களை, நல்முறையில் எவ்வாறு பயன்படுத்தலாம்,பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளி யிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகட்கு: 0181 365 0249

**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

www.tamilarangam.net



# தமிழரின் துயர் துடைப்பு நாட்களில் தம் பணியேற்ற புலம் பெயர்வாழ் தமிழ் மக்கள்

## யேர்மனிக்கிளையின் பங்கு

யேர்மனியில் தமிழர் வாழும் பகுதிகள் பரந்து கிடக்கின்றன. ஒரு வாரத்திற்குள் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஓர் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் கவனத்திற் கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், உலகத்தமிழர் இயக்கம், கலைபண்பாட்டுக் கழகம்,மாணவர் அமைப்பு ஆகிய அமைப்புகளில் இயங்கும், யேர்மனி தழுவிய அனைத்து நகர உறுப்பினர்களையும் அழைத்துத் துயர் துடைப்பு வாரத்தின் அவசியமும் முக்கியத்துவமும் விளக்கப் பட்டது. அனைத்து உறுப்பினர்களையும் சிறுசிறு குழுக்களாகப் பிரித்து குறிப்பிட்ட பகுதிகளுக்கான வேலைத்திட்டமும் வழங்கப்பட்டது.

சிங்கள இனவாத அரசின் மருந்துத் தடை, உணவுத்தடை, குடியிருப்புக்கள் மீதான குண்டு வீச்சு போன்ற கொடுமையான மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி, இன்றைய தமிழீழத்தின் உண்மை நிலைகளை விளக்கி, தமிழ், யேர்மனிய மொழிகளிலான துண்டுப்பிரசு ரங்கள் தயாராகின.

அண்ணளவாக நூறு உறுப்பினர் இந்தத் துயர் துடைப்பு வார வேலைத்திட்டத்தில் பங்கேற்று ஒரே காலகட்டத்தில் யேர்மனியின் அனைத்துப் பகுதிகளிலும் பரப்புரையையும் பங்களிப்புக் கோரிக்கையையும் துரித கதியில் செய்து முடித்தனர். பாசப் பெருக்கோடு தங்க நகைகள் உட்பட நிதிப்பங்களிப்புச் செய்து தமிழீழத்தின் பால் கொண்ட அன்பினைச் சுரந்து நின்ற மக்களைச் சந்தித்த மகிழ்வை துயர் துடைப்பு வார செயற்பாட்டிற் பங்கெடுத்தோர் பெருமையோடு கூறிக் கொள்கின்றனர்.

சுவற்றா நகர மையத்தின் நடைபாதையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளை, யேர்மனிய அமைப்பான "சரலியோன" அமைப்பு டன் இணைந்து தமிழீழமக்களின் துயர நிலையை விளக்கி "தகவல் நிலை" ஒன்றை ஏற்படுத்தி யேர்மனியர்கள் மத்தியில் ஆதரவு தேடியதில் கணிசமான பங்களிப்புக் கிட்டியது.

யேர்மனியில் உள்ள சைவ ஆலயங்கள் கிறிஸ்துவ ஆன்மீகப்பணியகம் போன்ற சமய நிறுவனங்களையும் அணுகி ஆதரவு கோரப் பட்டது. அவர்களுடைய பங்களிப்பும் திருப்தியாக அமைந்தது.

தமிழர் வியாபார நிலையங்களின் உரிமையாளர் களிடம் இன்றைய துயர்துடைப்பு வாரமுக்கியத் துவம் விளக்கப்பட்டு பங்களிப்புப் பற்றி வினவி னோம். அவர்கள் தாராளமனத்துடன் வாரி வழங் கினர்.

துயர் தடைப்பு வாரம் பற்றி நாளேடுகள் மூலம் அறிந்து தாங்களாகவே எமது வைப்பகக் கணக் கிற் பங்களிப்புச் செய்து நாட்டுப்பற்றை வெளிப் படுத்தியுள்ள தேசபக்தர்களையும் குறிப்பிட்டாற் றான் இது முழுமை பெறும்.

## டென்மார்க் கிளை

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் டென்மார்க் கிளை யினர் துயர்துடைப்பு வாரம் தொடர்பாக நாடளா விய ரீதியான தமது பணிகளை உலகெலாம் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களோடு இணைந்து துயர் துடைப்பு வார காலத்தில் சிறப்பாக மேற்கொண்டனர்.

சுமார் ஏழாயிரம் ஈழத்தமிழ் மக்கள் வாழும் டென்மார்க்கில் மேற்படி துயர் துடைப்பு வாரம் சம்பந்தமான தகவல்கள் கிடைக்கப்பெற்ற தும் ஏற்கனவே புனர்வாழ்வுக்கழகத்தின் பணி களை மேற்கொள்வோரோடு மேலும் பல புதிய தமிழீழ அபிமானிகள் தம்மையும் உற்சாகமாக இணைத்துக் கொண்டனர்.

வேலைகளில் திட்டமிட்ட வகையாக்க ஒழுங்கு முதலிலேயே உருவாக்கப்பட்டது. குறுகிய காலத்திற்குள் கூடியளவு மக்களை உணர்வு பூர்வமாக இணைத்துக் கொள்வது இதன் நோக்கமாக இருந்தது. இதனால் நிதி திரட்டுவோர நாடு முழுவதிலும் உள்ள நகரங்க ளுக்கு ஏற்றவாறு பிரக்கப்பட்டு மேற்கொண்ட ஒருவார காலத்தையும் உரிய முறையில் பயன் படுத்தினர்.

துயர் துடைப்பு வாரம் தொடர்பாக கழக தலைமைச் செயலகத்தாலும் அனைத்துலகச் செயலகத்தாலும் தொடர்பு சாதனங்கள் மூலம் உரிய விளம்பரங்கள் பரவலாகச் செய்யப்பட்டு இருந்தமையால் எங்கும் மக்கள் உணர்வுபூர்வ மாக பங்களிக்கக் காத்திருந்ததைக் காண முடிந்தது. கடந்த காலங்களை விட இவ்வாண்டு மக்கள் வழங்கியுள்ள ஈடுபாடும் மேலதிக பங்களிப்பும் இதை உறுதி செய்வதாக இருந்தன.

இது போன்றதோர் நிதி சேகரிக்கும் முறையை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் டென்மார்க் கிளையினர் வருடாவருடம் செய்வது வழமை. அதாவது வருடத்தில் ஓர் நாள் குறிப்பிட்ட திகதியில் சிலமணி நேரங்கள் மட்டும் நிதி சேகரிக்கத் திட்டமிட்ட வலையாக்க ஒழுங்கை உருவாக்கி பல ஆயிரம் தொண்டர் களை அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் பயன் படுத்தி டென்மார்க்கிலுள்ள சகல தரப்பட்ட வீடுகளுக்கும் சென்று உண்டியல் மூலம் நிதி சேகரிப்பதும் நிதி வழங்குவதும் இங்கு வழமையான விடயம். எமது துயர் துடைப்பு வாரம் தொடர்பான நடவடிக்கைகளும் ஏறத்தாள இதைத்தழுவியதாக இருந்தது. எனினும் இம்முறை புலம்பெயர்ந்த தமிழீழ மக்களையே நாம் இதன் பொருட்டு செயற்படச் செய்தோம். அடுத்த ஆண்டு அல்லது இனி வரும் காலங்களில் எமது வேலைத்திட்டங்களை யும் பிரச்சாரங் களையும் டெனீஸ் மக்களின் மத்தியில் அதிக மாக்கி அவர்களின் பங்களிப் பையும் பெற்றுக் கொள்ளக கூடிய முயற்சிகளில் ஈடுபட இத் துயர் துடைப்பு வாரம் எமக்குப் புதிய நம்பிக்கை யையும் புதிய அனுபவப்பட்ட நிவையும் தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து

தமிழர் தயர் துடைப்பு நாட்கள் என்னும் இத் திட்டத்தின் மூலம் பிரித்தானியா வாழ் தமிழ் மக்களிடம் கணிசமான நிதி திரட்டி, யுத்தச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழீழ மக்க ளுக்கான நிவாரணப்பணிகளுக்கு அனுப்ப வேண்டும் என்ற முனைப்புடன் த.பு.க வின் பிரித்தானிய கிளையினர் பின்வரும் செயற்பாடு களில் ஈடுபட்டனர்.

* துண்டுப்பிரச்சாரங்கள் சுவரொட்டிகள், மூலம் இத்திட்டம் பற்றி முதற்கட்ட அறிவித்தல்கள் செவ்வனே செய்யப்பட்டன.
* சண்றைஸ் வானொலியின் செய்தி அறிக்கை, விளம்பரங்கள் மூலம் இத்திட்டம் மக்களைச் சென்றடைய ஏதுவாக அமைந்தது.
* டாக்டர் மூர்த்தி அவர்கள் இத்திட்டம் பற்றி அளித்த பேட்டி 01.07.97 இல் சண்றைஸ் வானொலியில் சிறப்பாக அமைந்தது.
* 08.07.97 செவ்வாய் சண்றைஸ் ஒலிபரப்பின் சமூகப்பலகணி நிகழ்ச்சியின் போது இத்திட்டம பற்றி மேலும் வெற்றிகரமாக எடுத்துச் சொல்லப் பட்டது.
* தற்போது பிரபல்யம் பெற்றுவரும் IBC இன் 24 மணி நேர ஒலிபரப்பினூடு பல தடவைகள் இத்திட்டம் பற்றிச் சிறப்பாக எடுத்துச் சொல்லப் பட்டது. இம்முறை விஷேட முறையாக Teletone முறையும் Standing Order , credit card, Direct debit மற்றும் தபால் வழி மூலமும் நிதி சேகரிக்க ஏற்பாடாகி இருந்தது.

## பிரித்தானியாவில் 3.8.97 வரை துயர்துடைப்பு வாரம் நீடிப்பு

தாயகத்தில் எம்மவர்களின் துயர் துடைத்திட பிரித்தானியா வாழ்மக்களின் பங்களிப்பு முற்றாக நிவர்த்தி செய்யப்படாத நிலையை மனதிற் கொண்டு பெரும்பாலானவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு இத்துயர் துடைப்பு வாரம் 3.8.97 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் அமைப்புக்களிடம் வேண்டுகோள்

லண்டனில் பல்வேறு அமைப்புக்கள் உள்ளன. அவ்வமைப்புக்களின் ஆதரவுடன் கணிசமான நிதியைச் சேகரித்துத் தருமாறு த.பு.கழகம் வேண்டிக் கொள்கிறோம்.

## பல்கலைக் கழக மாணவர்களுக்கு எமது வேண்டுகோள்

பல்கலைக்கழக மாணவர்கள் தமது தமிழ் அமைப்பினூடாக கலை நிகழ்ச்சிகள், மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் நிதி சேகரித்து முன்னர் வழங்கியது போல் இம்முறையும் தொடர்ந்தும் ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

26.07.97 நடைபெற்ற ஊர்வலத்தின் போது £204.99 பணம் சேகரிப்பப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

### முல்லைத்தீவில் ஒரு வேளை கஞ்சியுடன் உயிர்வாழும் அகதிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணு க்காய் மல்லாவி, யோகபுரம் பகுதிகளில் தங்கியுள்ள அகதிகள் மாலை 6மணிக்குக் கிடைக்கும் ஒரு வேளை கஞ்சியை உட்கொண்டே சீவியம் நடாத்தி வருவதாகச் செஞ்சிலுவைச் சங்க இணைப்பதிகாரி எஸ் கிஸோர் தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாத்திரமே தற்போது உதவி வருகின்றது. அகதிகள் அங்கு ஆயிரம் இருப்பதனால் ஒரு வேளை கஞ்சியை மாத்திரமே வழங்கக்கூடியதாக இருப்பதாக அறியப்படுகிறது.

ஆதாரம்: தினக்குரல் 13.07.97

### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| TRO Canada: | Ph: (1416)463 7647 |
| TRO Denmark: | Ph: (4520)23 88 97 |
| TRO France: | Ph((331 46) 489 850 |
| TRO Germany: | Ph: (4921) 665 8508 |
| TRO U.K.: | Ph: (44181) 520 5876 |
| TRO Italy: | Ph; (39 91) 611 3179 |
| TRO Malaysia: | Ph: 603 255 2472 |
| TRO Netherlanl | Ph: 31 72 644 442 |
| TRO New Zealand ; | Ph: (649) 537 0258 |
| TRO Norway: | Ph: (47 22) 646 592 |
| TRO South Africa: | Ph: (27 471) 310 123 |
| TRO Sweden: | Ph: (4686) 870 649 |
| TRO Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| TRO U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| TRO Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

www.tamilarangam.net



## சிறுகதை




மண்ணை இரு கைகளாலும் குழைத்து வீட்டைச் சுற்றி வரிசையாகக் கட்டிய வரிச்சுகளுக்கிடையே வைத்துக் கொண்டிருந்த வசந்தன், நெற்றியால் வழிந்த வியர்வையை துடைத்தபடி வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். சுற்றிலுமாக இருண்டிருந்தது. மண் கையை வழித்து விட்டபடி மெதுவாக எழுந்து நின்றான். அதிக நேரம் இருந்தபடியால், நாரி கொதித்ததுகூட இப்போது, அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. இப்போது நினைக்கும்போதும் அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. இப்படியொரு வாழ்வு வருமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. வீட்டில் இருந்து கிணற்றடிக்குப் போவதென்றால்கூட கல்லுப்பதித்த நிலம். காலில் மண் படாமல் வாழ்ந்த அந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதா? நினைத்துப் பார்க்க அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

காட்டு விறகு சீராக எரிந்து கொண்டிருந்தது. சந்தோசமாக சமைத்துக் கொண்டிருந்த அம்மாவும், தங்கையும் எவ்வாறு இந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டார்கள்? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நினைவுகள் அவர்கள் மனதை சுடவில்லையா? எத்தனை வசதியான வாழ்க்கை எவ்வாறு தூக்கியெறிய மனம் இடங்கொடுத்தது. அருகில் ஏதோ சிறகு அடிக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அதே மணிப்புறா அன்றொரு நாள் பூவரச மரத்தில் கட்டிய கூட்டை செண்பகத்திடம் பறி கொடுத்துவிட்டு சோகமே உருவெடுக்க நின்றது. இன்றும் அவலத்துடன் அங்குமிங்கும் பறந்தது. என்னவாக இருக்குமென்று பார்ப்பதற்காக எழுந்தவனின் கண்களில் தென்பட்டது



மரத்தில் கீழ் உடைந்து கிடந்த முட்டையும் பிய்த்தெறியப்பட்ட கூடும். அவனுக்குத் தெரியும் மீண்டும் நல்லதொரு இடம் பார்த்து கூடு கட்டத் தொடங்குமென்று.

அம்மாவிடம் கூறிக்கொண்டு குளத்தடிக்கு போவதற்காக வெளிக்கிட்டான். துவாயை எடுத்துத் தோள்களில் போட்டவன் குளக்கட்டுப் பக்கமாக நடக்கத் தொடங்கினான். அல்லி இலைகளிடையே நீந்திக் கொண்டிருந்த சிறகைகள் இரண்டு சடசடவென இறகை அடித்தபடி வேகமாக வானில் எழுந்து பறந்தது. பட்டமரத்தில் அமர்ந்திருந்த நீர்க்காகம் ஒன்று சிறகு இரண்டையும் விரித்து வைத்துக்கொண்டு அலகால் சீர்படுத்திக் கொண்டிருந்தது. அருகில் இருந்த பற்றைக்குள் இருந்த கீரி ஒன்று பதறியடித்துக்கொண்டு வீதியைக் கடந்து ஓடியது. இவை எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டே வந்தவனுக்கு 'சுள்' எனக் காலில் ஏதோ கடிக்க 'வெடுக்' என காலைத் தூக்கியவனுக்கு, பிறகுதான் தெரிந்தது கட்டெறும்பு வரிசையில் காலை வைத்துவிட்டோமென்று.

முன்பெல்லாம் எறும்பு வரிசையைக் கண்டால் 'ஸ்பிறேயரில்' மண்ணெண்ணை எடுத்து அடித்துவிடுவான். இப்போது அவ்வாறு எண்ணத் தோன்றவில்லை. எறும்புகளைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருந்தது. யார் இவர்களிற்குச் சொல்லிக்கொடுத்தது. நிரை குலையாமல் வரிசையாகச் செல்லுங்கள் என்று. திடீரென அவனுக்கு ஆர்வம் ஏற்பட நிரை எங்கே செல்கின்றது என்று பார்க்க அதன் பின்னே சென்றான். முன்னால் சென்ற எறும்பு அங்கும் இங்கும் ஓடி பாதை காட்டியபடி சென்றது. பின்னால் செல்பவை தங்களின் முட்டைகளை சுமந்தபடி சென்றுகொண்டிருந்தன. எறும்பு வரிசை அருகில் கிடந்த பனை யோலைக்குள் சென்றதும்

அங்குமிங்கும் கலைந்தோடத் தொடங்கியது. என்னவென்று பார்ப்பதற்கு குனிந்தவனுக்கு அப்போதுதான் அதனுள் ஒழிந்திருந்த ஓணான் தென்பட்டது. நாக்கை நீட்டி நீட்டி ஒவ்வோர் எறும்பாக அது உணவாக்கிக் கொண்டிருந்தது. உள்ளுணர்வை ஏதோ ஒன்று தாக்க 'சூய்' என்று கலைத்தான். சர சர என ஓணான் பற்றைக்குள் ஓடி மறைந்தது. பின்புதான் யோசித்தான், ஓணான் அரைகுறை வயிற்றோடு ஓடியிருக்குமே என்று. ஒன்று வாழ வேண்டுமானால் மற்றொன்று அழியத்தான் வேண்டுமா? அவனுக்கு குழப்பமாக இருந்தது.

மெதுவாக எழுந்து குளத்தடியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

∴ ∴ ∴ ∴

முற்றத்து வேலியில் படர்ந்திருந்த அவரையின் பூக்களில் தேங்கியிருந்த பனி நீர் சொட்டுச் சொட்டாக நிலத்தில் வீழ்ந்துகொண்டிருந்தது. மண் திண்ணையில் அமர்ந்திருந்தபடி, தான் செய்த சிறிய தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான் வசந்தன். வானில் ஏதோ இரையும் சத்தம் கேட்டது. என்னவென்று பார்ப்பதற்கு திண்ணையால் எழுந்து சென்று வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். காற்றைக் கிழித்தபடி இரண்டு 'கிபிர்' விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் எங்கோ குண்டு வெடிக்கும் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டன. "கிளிநொச்சிப் பக்கமாகத்தான் இருக்கும்" தனக்குள் கூறிக்கொண்டான்.

குசினிக்குள் இருந்துகொண்டு அம்மா புலம்புவது கேட்டது. அவவும் என்ன செய்வா பாவம். அப்பாவை இழந்த துயர், வீடுவாசல் இழந்த துயர், தொடர்ச்சியான துயர்கள். அவனுக்கே சலிப்பாகத் தான் புரிந்தது. முன்பெல்லாம் ஏதோ ஒரு சோர்வான சிந்தனையே மனதை வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.இப்போது அப்படியல்ல. எப்போதும் தெளிந்தபடியே மனம் இருக்கிறது. ஏனெனில் அவன் இயற்கையைப் புரிந்துகொண்டவன்.

வெட்டிய முதிரை விறகை சுமந்துகொண்டு வீட்டிற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கியவன் கண்களில், வீதியால் மக்கள் பொருட்களுடன் செல்வது இருந்தது. மெல்ல எழுந்து கிணற்றடிப் பக்கமாகச் சென்றான். ஒரு வாரத்திற்கு முன் நட்ட தேசிக்கன்றைக் காணவில்லை. களைகள் மூடிவிட்டது, குனிந்து களைகளைப் பிடுங்கினான். தேசி இலைகளை ஏதோ ஒரு புழு அரித்துக்கொண்டிருந்தது. சிறிய தடியொன்றை எடுத்து அவைகளை அகற்றினான். ஒரு தேசிக் கன்று வளரவே இத்தனை தடைகள் என்றால்?

தான் வாழ்ந்த சமுதாயத்தின் பிழைகள் தெரிந்தது. ஏன் பிறந்தோமென்று தெரியாமல் சாகும் அவலம் புரிந்தது. எதையெதையோ தேடி இழந்துவிட்ட நாட்கள் தெரிந்தது. இச் சமுதாயம் போராடக் கற்றுக் கொடுக்கவில்லை. எப்படியாவது பொருள் தேடத்தான் கற்றுக்கொடுத்தது.

காட்டுப் பக்கம் ஏதோ ஒரு மிருகம் அவலமாக அலறியது. கோடாரியால் காய்ந்த முதிரை மரத்தை தறித்துக் கொண்டிருந்த வசந்தன், கோடாரியை மரத்தில் சாய்த்துவிட்டு வெட்டிய குற்றிமேல் ஏறி அமர்ந்தான். போட்டிருந்த 'வெனியன்' வியர்வையால் ஊறி, உடம்புடன் ஒட்டிக் கொண்டிருந்தது. தன் உடலும், மனமும் வன்னிக்கு வந்ததில் இருந்து ஏதோ மாற்றம் ஏற்பட்டிருந்தது அவனுக்குப் தெரிந்தது. விறகை அருகில் போட்டவன், கைகளால் மேலில் பட்டிருந்த தூசுகளைத் தட்டியபடி நிமிர்ந்தான். "தம்பி, கிளிநொச்சிக்கு ஆமி வந்துட்டுதாம் நீங்கள் இன்னும் வெளிக்கிடேல்லையே?" என்றபடி இவனுடைய பதிலை எதிர்பார்க்காமல் முத்தையாக் கிழவர் சென்று கொண்டிருந்தார்.

நாங்களும் புறப்படுவோம் என்று நினைத்தபடி திரும்பியவனுக்கு, வாசலில் சோகத்துடன் நிற்கும் தாயும் தங்கையும் இவனையே பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்துப் பெருமூச்சுக்கலந்த சிரிப்புடன் வேய்ந்திருந்த ஓலைகளைக் கழற்றத் தொடங்கினான். எங்கிருந்தோ பறந்துவந்த மணிப்புறா கூரையில் அமர்ந்து அங்கும் இங்கும் பார்த்துவிட்டு முள்வேலியில் படர்ந்திருந்த அவரைக்கொடிக்குள் பறந்து சென்று புகுந்தது. வசந்தனின் காதுகளில் புறாக்குஞ்சுகள் கீச்சிடும் சத்தம் கேட்டது. அவனது முகத்தில் புன்னகை கோடிட்டது. இம்முறை மணிப்புறா செம்பகத்திடம் வென்று விட்டது. ✷


## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **29 - 08 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam H ›use, 202Long Lane, LondonSE1 4QB.**



www.tamilarangam.net






## கனவு சுமந்தவனே!

தமிழீழக் கனவை நெஞ்சிலே சுமந்து
உன்னுயிரை ஈய்ந்த நாயகனே!
எம் வாழ்வு நீடிக்க
உன் வாழ்வை முடித்தாயே!
சிதைந்து கிடக்கும் மண்ணுக்காய்
உன்னுடலை சிதைத்தாயே!
தாயகத்தின் கனவுக்காய்
உன் கனவை அழித்தாயே!

*-சி. சோபி, பிரான்ஸ்.*

## இருளில் ஈகங்கள்

முகங் காணமுடியாத ஈகங்கள்
எழுத்தில் எழுதமுடியாத வரலாறுகள்
ஏன் இந்த மௌனம்?
உங்களுக்குத் தெரியும், எங்களுக்கு. . . .
நிச்சயம் உங்கள் வரலாறு நாளை
சுதந்திர தமிழீழத்தில் ஒளிரும்!

*-சந்திரகுமார்.*

## ஓ இது யார்?

"நம் தேசம் `விளைந்த விதை"
நாளைய எம் குழந்தைகள்
நன்றிகொண்டு, பேசும் பெருமையுடன்.
"ஓர் தேசத்தை செதுக்கிய சிற்பி"
சரித்திர ஆர்வலரின் அரங்கில்.
ஏடுகளில் வீரத்தின் புதிய அங்கம்;
எதிரிகள் வியந்த – புரியாத புதிர்!
விடியலை பிரசவித்த கறுப்பு சூரியர்!

*-வல்லை, கித்துள்.*



## என்றும் மறவாரே!

நெல்லியடியிலன்று
நெத்தியடி கொடுப்பதற்காய்
மின்னலென பாய்ந்த
மில்லர் எனும் கரும்புலியே
மண்ணும் வானமும் உள்ளவரை
மக்கள் உனை மறவாரே!

*- திருமதி ஷாந்தி ஆனந்தன்*
*டென்மார்க்.*

## கரும்புலி வீரனிவன்

மண்ணின் விடுதலைக்காய்
மரணத்தை மனமேற்று
தன்னில் வெடிகுண்டேந்தி
எதிரியின் பாசறைக்குள்
எரிமலையாய் வெடித்து
எமைக்காத்த வீரனிவன்
கரும்புலி வீரனிவன்!

*- பாலசிங்கம் முருகதாசன், யேர்மனி.*

## வீர சரித்திரங்கள்

தாயகம் மீட்டிட
சாகும் நாள் குறித்து
உடலை வெடியாக்கி
உயிரை விசையாக்கி
களம் புகும் காவியங்கள்–
வீர சரித்திரங்கள்
எங்கள் கரும்புலிகளன்றோ!

*-ரஞ்சித் (இலண்டன்)*

## எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் நிழல்

நினைத்த குறியை நிழலாய் தொடர்ந்து
நொடிக்குள் நொருக்கும்
உங்களை ஓவியமாய்
வரைந்திடவே முடியவில்லை!
இந்த நிழல் மட்டும் போதும்
நினைக்கும் பொழுதெல்லாம்
எம் நெஞ்சகத்தில் வரைந்து பார்ப்போம்!

*- ம. தேவன்ரவி, யேர்மனி.*

## கண்முன்னே சென்றதேனோ?

தாயகத்தில் தமிழினத்தை
கலங்க வைத்தவனை
கரும்புலியாய் நீசென்று
களமதிலே கொன்றொழித்து
கதிரவனைப் போலெமக்கு
ஒளியொன்றைக் காட்டிவிட்டு
கண்முன்னே சென்றதேனோ?

*-ஈழத்தீசன், வரணி, தமிழீழம்.*

## விடுதலையின் நாயகர்கள்

உயிர்காத்த புனிதர்கள்
உறுதிகொண்டு எதிரியின்
இலக்கைத் தகர்த்தெறிந்த
இரும்பு மனிதர்கள் இவர்கள்.

உங்களின் அதிர்வுகளால்
உலகமே திகைத்துக் கொண்டது
கடலலைகள்கூட கரையைத் தேடி அலைந்தது
உங்கள் பாதையிலே புல்லும் புலியாகும்!

*- மணலூர் லே. ராஜன், இத்தாலி.*

## வாசகர் கடிதம்:

### களத்தில் ஆசிரியர் குழுவிற்கு

களத்தில் பத்திரிகையை தொடர்ந்து படிக்கும் வாசகன் நான். எம் மண்ணின் வரலாற்று விழுமியங்களை, பொருண்மியத்தை ஆய்வு செய்யும் கட்டுரைகள் வரவேற்கத்தக்கவை. மாதம் ஒருமுறையாவது சேர்த்துக்கொள்வீர்களா? வேரும் விளைநிலமும், தாயகச் செய்திகள், தாயகம் நோக்கிய பயணம் யாவும் தரமானதும் தகுதியானதுமே. நின் சேவை நிலைக்க எமது ஆதரவு என்றுமுண்டு. வாழ்க தமிழ். வளர்க நம் சமுதாயம்.

*அ. வேணுகோபாலன், யேர்மனி.*

## ஒளி விளக்குகள்

கறுப்பாடை தரித்திட்ட
வெள்ளை உள்ளங்கள்
அன்னை மடிபிறந்து
தமிழ் மண் வளர்ந்து
தலைவர் வழிசென்று
எதிரி பலம் தகர்த்து
இருள் நீக்கும்
ஒளி விளக்குகள்!

*-காரை ந. சேகர், இத்தாலி.*

**ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது**

# என் உடலை மறைக்க எனக்கொரு துணி வேண்டும்!

உண்மைதான்
இப்பொழுதெல்லாம்
என் மூச்சு
முட்டி முட்டியே வருகிறது
காற்றில் கலப்படமா
காவல் சிக்கலா . . . .

உண்மைதான்
இப்பொழுது–
நான் அம்மணமாய்
என் உடலுக்கு வேண்டிய
உணவு மட்டும் இல்லாமலில்லை!
எல்லாமும்தான்
–போதிய உணவு
–போதிய உணர்வு
–போதிய மூச்சு
–போதிய உடைகள்
எல்லாமும்தான் இல்லை!

உணர்வுச் சுடுகாட்டில்
சுட்டெறியப்பட்ட
எம்மக்களின் பிணங்களின்மீது
ஈக்கள் மொய்த்திடும் கொடுமை
இன்னும்
எத்தனை நாட்களுக்கு
இக்கொடிய காட்சிகள்
என் மனத்தில் சிறைபடுமோ!

தெரு மனிதர்களில்
தென்படுவோர் யார்
–முழுமையாக–
ஊனச் சமூகத்தின்
மூழிக் கோலமாய்
எம் தமிழர்!

புல்லின் நுனியில்
படுத்துறங்கும் பனித்துளியின்
நிம்மதி–
என்று எம்முடையதாகுமோ?

சூரியக் கதிர்களில்
சூடுபடும் புழுக்களுக்கு
தோல் கொடுக்கும்
தொண்டர்கள் யாருண்டு!

ஈழத்தில் வதைபடும்
எம் தமிழர்
உயிர் காக்க–
உணர்வு காக்கும்
கரங்கள் யார் தருவார்!

உலகப் பேரேட்டில்
தமிழனும்–
புழுவும்–
ஒன்றுதானாம்
இரண்டும் மிதிபடும் சொற்களாம்!

என்னிடம் உடையில்லை
என் உறுப்புக்களை
மூடி மறைக்க
எல்லாமும் பிடுங்கப்பட்டன
போரின் நுனிப் பற்களில்
என்னை வதைத்தனர்!
இன்று . . .
இரவுதான் என் உடை
கறுப்புத்தான் எனக்குக் காவல்!

பகையே சொல் . . .
போய்ச் சொல்
எம்மினத்தின் ஏழ்மையை
எம்மினத்தின் போராட்டத்தை
எம் உரிமைக்கான விளைச்சலை
தக்கவரிடம் தகுந்தாற்போல்
சொல்!

இன்றைய
விடியலிலும்
நானும் எம்மவரும்
நிர்வாணமாய் . . .
நேற்றைய உடைகளில்
இன்றைய நிர்வாணத்தைத்
தேடியெடுத்துள்ளோம்!

எமது நடைபாதைகளில்
முள்ளை வைத்து
மூடிவிட்டார்கள் . . .




நடைபாதையெங்கும்
ரண ஊர்வலமாய் நாங்கள்!

ஏய்! பகையே
வெளியே வா
நேருக்கு நேராய்
மோதிப்பார்ப்போம்
எவர் கண்ணில்
மின்னல் பளிச்சிடும்
என்பதைத்தான் பார்த்துவிடுவோம்!
எவர் துமுக்கி வெல்லும்–
ஓர் அஃறிணைப் போர் புரிவோம்!

சூரியக்கதிர்களை
சூடுபடுத்தி துமுக்கி செய்வோம்!
ஒரு மானப்போருக்கான
சாசனத்தில் உதிரக் கையொப்பமிடுவோம்!

பகையே! வா
ஓர் ஆணவச் சிந்தனையில்
எம்மை அடக்கியாளப் புறப்பட்டது
யார் குற்றம்!
நெருப்பை கையில் பிடித்து
வெண்சுருட்டு பற்ற வைத்தது
யார் குற்றம்!
துமுக்கிக்கு வெடி மருந்து ஊட்டியது
யார் குற்றம்!

இன்று
நான் மட்டுமல்ல . .
நீயும்தான் நிர்வாணமாய்
–உடை
எனக்கு மட்டும் வேண்டியதல்ல
–உனக்கும்தான்.

சீ. அருணாசலம் பக்ரவ், மலேசியா.

## எங்களுக்கு இந்த மண் வேண்டும்!

துறையூரான் – சவூதி அரேபியா

காலச்சுவடு பதித்த காயம்
இன்னும்
எம் நெஞ்சில்!

உரிமைகள்
மறுக்கப்பட்டு
அடிமைகளாக்கப்பட்டோம்!

சுதந்திரம்
சிதைக்கப்பட்டு
சிறையினில் வதைக்கப்பட்டோம்!

பூவும் பொட்டும் மட்டுமல்ல
ஆடையும் இழந்தது
எங்கள் பூமி!

எதிரியின் காலடியில்
இன்னும்
எங்கள் தேசம்!

ஏனிந்த வாழ்வு?
ஏனிந்த இழிநிலை?

காலச்சுவடு பதித்த காயம்
இன்னும்
எம் நெஞ்சில்!

பொன் வேண்டாம்!
பொருள் வேண்டாம்!
எங்களுக்கு
இந்த மண் வேண்டும்!

நாம்
துள்ளி விளையாட
நிம்மதியாய் இருந்து
நீள் மூச்சு வாங்கி–விட . . .
எங்களுக்கு
இந்த மண் வேண்டும்!

ஈழ மண்ணில்
விடியலைத் தேடி
இன்னொரு சந்ததி
எழுந்திட வேண்டாம்!

தமிழன் புலிக்கொடி
பறந்திட வேண்டும்!
தரணியில் ஈழம்
பிறந்திட வேண்டும்!

தமிழன் புலிக்கொடி
பறந்திடும் பாராய்!
தரணியில் ஈழம்
பிறந்திடும் நாளை!

www.tamilarangam.net

# கறுப்பு யூலை நினைவாக இலண்டனில் ஊர்வலம்





"கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூடி தமிழர் பிரச்சினையை பிரித்தானியாவில் உள்ள அரச, அரச சார்பற்ற அமைப்புகளுக்கு எடுத்து விளக்கி வருகிறோம். இருப்பினும் நாம் ஆற்றும் செயற் திட்டங்கள் போதாது."

**- திரு. மார்க் ஏப்பிரகாம்ஸ்**
(சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு, பிரித்தானியா)



"தமிழீழ விடுதலைப் போராட்டம், எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் ஊக்கத்தை கொடுக்கிறது. தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எமது ஆதரவுக் குரல் எப்போதும் உண்டு"

**- திரு.வீவற்ஏவில்**
(குர்திஸ் தகவல் நிலையம்)










"வெளிநாட்டுச் செய்தித் தொடர்புச் சாதனங்களின் தடையுடன் தமிழர்கள் மீதான போர் சிறிலங்கா அரசால் நடாத்தப்படுகின்றது. இதனால் உண்மைச் செய்திகள் வெளிவருவது மந்த நிலையில் உள்ளது. இவ் உண்மைகளை தமிழர்களாகிய நீங்கள், தமிழரல்லாதாரிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுவதால் அவர்களிடம் உங்களது பிரச்சினைகளை புரியவைக்கலாம்."

**- ரேச்செல் ஜென்கின்ஸ்**
(லூதர் கிங் மறைக்கல்லூரி - மான்செஸ்ரர்)

"இன்று உலகில் 45 குறிப்பிடக்கூடிய போர்கள் நடைபெறுகின்றன. இருப்பினும், இதில் தமிழர்களின் போராட்டம் ஓர் வித்தியாசமான இடத்தை வகிக்கின்றது. நாம் எப்பொழுதும் உண்மைக்கு குரல் கொடுப்போம். அந்த வகையில், இலங்கையின் தமிழர் பகுதிகளில் நடைபெறும் கொடுமைகளை வெளிப்படுத்துவதில் நாமும் பங்கு கொள்வோம்"

**கலாநிதி ரொனி கெம்ஸ்ரர்**
(ஆயுதவிற்பனைக்கெதிரான அமைப்பு, பிரித்தானியா)

பேச்சாளர்களை அறிமுகம் செய்த
**- செல்வி டியற்றி மக்கொனால்**
(தமிழர் போராட்டத்திற்கு குரல் கொடுத்துவரும் பிரித்தானியப் பெண்மணி)



"தாயகத்தை மீட்கும் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள நமது தமிழ் இராணுவத்திற்கு தொடர்ந்தும் உங்கள் ஆதரவினை வழங்கி அவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்."

**- திரு. பற்றிமாகரன்**
ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்)



"மனித உரிமை மீறல்களை வெளியுலகிற்கு வெளிப்படுத்த வேண்டியது எம் அனைவரினதும் கடமை."

**- செல்வி எலிசா மான்**
("தமிழர் மனித உரிமைகள் மையம்.")



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-667-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்